# உதயன்

பக்கங்கள் - 20 விலை - 30 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் : 351 கார்த்திகை 1 ஆம் நாள் திங்கட்கிழமை 16 நவம்பர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## நேற்று மட்டும் 704

**17,000 கடந்தது மொத்தப் பாதிப்பு**

18 ➤

# நிலைமை பதற்றம் ஆனாலும் அஞ்சோம்

### முடிவுகட்டியே தீருவோம் என இராணுவத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, நவம்பர் 16

“இலங்கையின் தற்போதைய நிலைமை பதற்றம் தான். ஆனாலும், நாம் அஞ்சமாட்டோம். கொரோனா வைரஸின் மூன்றாவது அலைக்கும் முற்றுப்புள்ளி வைத்தே தீருவோம்' இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா நேற்றிரவு தெரிவித்தார்.

18 ➤



## 198 புள்ளிகள் பெற்று மகாஜனா மாணவி வடக்கில் முதலிடம்

யாழ்ப்பாணம், நவ. 16
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் மகாஜனக் கல்லூரி மாணவி சுபாஸ்கரன் ஜனுஸ்கா 198 புள்ளிகளுடன் வடக்கு மாகாணத்தில் முதலிடம் பிடித்தார்.

17 ➤

## சிறைக் கொத்தணி 437 ஆக அதிகரிப்பு!

**கைதிகள் மத்தியில் கொரோனா வேகம்**

கொழும்பு, நவ. 16
இலங்கையிலுள்ள சிறைச் சாலைகளில் 5 அதிகாரிகள், 103 கைதிகள் என மேலும் 108 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி

18 ➤

*முச்சந்தி முரளி*



"இதென்னடா சொல்லி வைச்ச மாதிரி ஒவ்வொரு நாளும் 5 பேரை மட்டும் கொரோனா கொல்லுது. 5 தான் அதுக்கு பிடிச்ச நம்பரோ?"

## 2021 கல்வி ஆண்டுக்கான கற்றல்கள் ஜனவரி 4இல்!

கொழும்பு, நவ. 16
2021ஆம் ஆண்டு முதலாம் தவணைக் கல்வி நடவடிக்கைக்காகப் பாடசாலைகள் முதல்கட்டமாக ஜன

18 ➤

## கொரோனாவால் மேலும் ஐவர் பலி

**மொத்த இறப்பு 58**

கொழும்பு, நவ. 16
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் நேற்று 5 பேர் உயிரிழந்தனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்தார்.

18 ➤

## 600 குடும்பங்கள் யாழில் தனிமை

யாழ்ப்பாணம், நவ. 16
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இப்போதுவரை 600 குடும்பங்கள் தனிமைப்படுத்தலில் உள்ளன. தொற்று ஏற்பட்டிருக்கலாம்

18 ➤

## புலமைப்பரிசில் வெளியீடு: ஐவருக்கு 200 புள்ளிகள்

கொழும்பு, நவ. 16
இவ்வருடம் ஒக்ரோபர் மாதம் 11ஆம் திகதி நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின்

18 ➤

## அரியாலையில் தங்கியிருந்தவருக்கு தொற்று உறுதி!

**15 குடும்பங்களைச் சேர்ந்த 61 பேர் தனிமைப்படுத்தலில்**

யாழ்ப்பாணம், நவ. 16
லண்டனில் இருந்து யாழ்ப்பாணம், அரியாலையில் வந்து

17 ➤

## துயிலும் இல்ல சிரமதானத்தில் பொலிஸார் இடையூறு !!

யாழ்ப்பாணம், நவ. 16
யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களைத் துப்புரவு செய்ய நேற்று நடவடிக்கை எடுக்கப்பட்ட நிலையில், பொலிஸார் அதற்குத் தடை ஏற்படுத்தும் விதத்தில் செயற்பட்டனர். அதனால் சற்றுக் குழப்பநிலைமை ஏற்பட்டது.

18 ➤

## தம்பகாமம் பகுதியில் ஒருவர் படுகொலை

கிளிநொச்சி, நவ. 16
கிளிநொச்சி, பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தம்பகாமம் பகுதியில் குடும்பத்தலைவர் ஒருவர் நேற்று மாலை வெட்டிப் படுகொலை

18 ➤




# 3ஆவது அலைக்கு மத்தியில் வருகின்றது கன்னி 'பட்ஜெட்'

- இறக்குமதி கட்டுப்பாடுகள் தொடரும்
- ஏற்றுமதி சுற்றுலாத்துறைகளுக்கு சலுகைகள்

**கொழும்பு, நவ.16**

**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசின் கன்னி வரவு – செலவுத் திட்டம் நாளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.**



நாடாளுமன்றம் 17 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடவுள்ளது. பிற்பகல் 1.40 மணியளவில் நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்சவால் வரவுசெலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும். அன்று நிதி அமைச்சரின் உரை மாத்திரமே இடம்பெறும்.

மறுநாள் முதலே வரவுசெலவுத் திட்டம் மீதான விவாதம் ஆரம்பமாகும். டிசெம்பர் 10 ஆம் திகதி மாலை இறுதி வாக்கெடுப்பு நடைபெறும். மொட்டு ஆட்சியின்கீழ் இதுவரை 2 இடைக்கால கணக்கறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலும், முழுமையான வரவுசெலவுத் திட்டம் முன்வைக்கப்படும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

அதேவேளை, இந்த முறை வரவு செலவுத் திட்டத்தில் பொருளாதார வளர்ச்சியை மையப்படுத்திய திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

வாகன இறக்குமதிக்கான கட்டுப்பாடுகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கும் ஏற்றுமதி மற்றும் சுற்றுலாத்துறைகளுக்கு நிறைய சலுகைகளை வழங்குவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இறக்குமதி கட்டுப்பாடுகள்மூலம் சுமார் ஒரு பில்லியன் அமெரிக்க டொலரைச் சேமிக்கக்கூடியதாக இருந்துள்ளது என நிதி அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதனால் கட்டுப்பாடுகளைத் தொடர்வதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் சுற்றுலாத்துறையும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அதனை மீளக்கட்டியெழுப்பும் நோக்கிலேயே அந்தத் துறைக்கு கூடுதல் சலுகைகள் மற்றும் மானியங்கள் வழங்கப்படவுள்ளன. (எ-44)


## தீபாவளி குத்துவெட்டு; 18 பேர் சிகிச்சையில்!

யாழ்ப்பாணம், நவ.16

தீபாவளி தினத்தன்று இடம்பெற்ற பல்வேறு வன்முறைச் சம்பவங்களில் காயடைந்து நேற்றிரவு மட்டும் 18 பேர் மந்திகை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் சிலர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். பருத்தித்துறை, துன்னாலை போன்ற வடமராட்சியின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்களே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்கள் தீபாவளித் தினத்தன்று நடந்த வாள்வெட்டு மற்றும் தாக்குதல் சம்பவங்களில் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக நெல்லியடி மற்றும் பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-26)



## சிறை அதிகாரிகளின் விடுமுறை இரத்து

கொழும்பு, நவ.16

மறு அறிவித்தல் வரை அனைத்து சிறைச்சாலைகள் அதிகாரிகளுக்கான விடுமுறைகளும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

சிறை அதிகாரிகள் அனைவரும் இன்று காலை 8 மணிக்கு முன்னர் கடமைக்கு சமூகமளிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது என சிறைச்சாலைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (எ-இ)

## பல்கலை பேரவைக்கு புதிய உறுப்பினர்



யாழ்ப்பாணம், நவ.16

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக பேரவைக்குப் புதிய உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள பீடங்களின் பீடாதிபதிகளின் எண்ணிக்கைக்கேற்ப பேரவையின் வெளிவாரி உறுப்பினர்களின் எண்ணிக்கையை ஈடு செய்யும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத் துறையின் முன்னாள் தலைவரும், வாழ்நாள் பேராசிரியருமான அருட்பணி ஞான முத்து பிலேந்திரனே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரால் பேரவை உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான அறிவித்தல் நேற்று முன்தினம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால், யாழ்ப்பாணம் பல்கலைக்கழத் துணைவேந்தருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வாழ் நாள் பேராசிரியர் அருட்பணி ஞான முத்து பிலேந்திரன் யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத் துறையில் மிக நீண்ட காலமாகப் பணியாற்றி வருகின்றார். யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கலைப் பீடத்தின் பதில் பீடாதிபதியாக இவர் பணியாற்றிய காலத்திலேயே இந்து கற்கைகள் பீடத்துக்கான முன்மொழிவு இவரால் கையொப்பமிடப்பட்டு முன்மொழியப்பட்டிருந்தது. (ஒ.5)

## கொரோனாச் சிகிச்சைக்கு மருத்துவமனைகள் தயார்!

### சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல தெரிவிப்பு

கொழும்பு, நவ.16

கொரோனா தொற்றாளர்களுக்குச் சிகிச்சை வழங்குவததற்காக மேலும் சில வைத்தியசாலைகள் தயார்ப்படுத்தப்பட்டுள்ளன என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:

தேவை கருதி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நாடளாவிய ரீதியில் தற்போது 36 சிகிச்சை நிலையங்களில் கொரோனாத் தொற்றாளர்களுக்கு சிகிச்சை வழங்கப்படுகின்றது. தற்போது 2 ஆயிரத்து 800 படுக்கைகள் தயார் நிலையில் உள்ளன. நாளாந்தம் தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கையுடன், தொற்றிலிருந்து குணமடைவோர் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்வதால் சிகிச்சை நிலையங்களில் நெருக்கடிநிலைமை ஏற்படவில்லை என்றார். (எ-இ)

## கொரோனா அசுர வேகம்; பரிசோதனைகள் மந்தம்

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ.16

கொரோனாத் தொற்று ஆபத்து வலயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ள குருநாகல், கேகாலை, களுத்துறை மாவட்டங்களில் உள்ள மருத்துவமனைகளில் பி.சி.ஆர். பரிசோதனை ஆய்வுகூடங்கள் இல்லை என்று சுட்டிக்காட்டியுள்ளது அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்.

அந்தச் சங்கத்தின் தொகுப்பாளர் மருத்துவர் ஹரித அளுத்கே இது தொடர்பாகத் தெரிவித்துள்ளதாவது

தற்போது 20 அரச மருத்துவமனைகளிலும், 5 தனியார் மருத்துவமனைகளிலும், இராணுவ மருத்துவமனையிலும் பி.சி.ஆர்.பரிசோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பி.சி.ஆர். பரிசோதனைக்கான ஆய்வுக்கூடம் இல்லை. ராகமை வைத்தியசாலையில் தினமும் சுமார் 100 பேருக்கு இரண்டு தடவைகள் பரிசோதனைகளை நடத்துவதற்கான உபகரணம் உள்ளது. அனைத்து மருத்துவமனைகள் ஊடாகவும் நாளொன்றுக்கு 7 ஆயிரம் பி.சி. ஆர். பரிசோதனைகளே நடத்தப்படுகின்றன. கொரோனா வைரஸ் பரவி வரும் வேகத்துக்கு இந்த எண்ணிக்கையானது எந்த வகையிலும் போதுமானதல்ல. இந்த எண்ணிக்கை அதிகரிக்கும் கட்டாயமான தேவை உள்ளது. என்றார். (எ-இ)

# மேடைப்பேச்சுடன் முடிந்தது கோத்தாவின் வாக்குறுதிகள்

## சம்பிக்க ரணவக்க விளாசல்



**கொழும்பு, நவ.16**
**கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாக பதவியேற்று ஓராண்டு நெருங்கும் நிலையில் நாட்டு மக்களுக்கு வழங்கப்பட்ட உறுதிமொழிகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச்செயலாளருமான சம்பிக்க ரணவக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.**

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது கே.பியை வெளிநாட்டில் இருந்து கொண்டுவந்தது போன்று மத்திய வங்கி பிணைமுறி கொள்ளையில் ஈடுபட்ட அர்ஜுன் மகேந்திரனையும் அழைத்துவருவோம் என கோத்தாபய ராஜபக்சவும், அவரின் சகாக்களும் கர்ஜித்தனர். ஆனால் அர்ஜுன் மகேந்திரனை நாட்டுக்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அலோசியஸ் போன்றவர்கள் பிணையில் சென்றுள்ளனர். எமது ஆட்சியின்போது இந்த தவறு இடம்பெற்றிருந்தாலும் அலோசியஸ் நிறுவனத்தின் நிதிகளை முடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது, சூத்திரதாரிகள் சிறைகளில் அடைக்கப்பட்டனர். அதேபோல் ஈஸ்டர் குண்டுத்தாக்குதலுடன் தொடர்புபட்ட அனைவரும் தகுதி தராதரம் பாராது தண்டிக்கப்படுவர் என்ற உறுதிமொழியும் வழங்கப்பட்டது. ஆனால் சஹ்ரானை இயக்கியது யார், அவர்களின் பின்புலம் என்ன போன்ற விடயங்கள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. அந்தக் குழுவின் தலைவராக சஹ்ரான் இருக்க வாய்ப்பில்லை. தலைவன் இருப்பதாலேயே சஹ்ரான் தாக்குதலுக்கு சென்றிருக்கக்கூடும். இதன் பின்புலம் இன்னும் கண்டறியப்படவில்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கவில்லை. இந்த இரண்டு விடயங்களையும் செய்வதற்கு கொரோனா வைரஸ் பரவல் தடையாக அமையாது. கடந்த ஒருவருட காலப்பகுதியில் கோத்தா தலைமையில் பெரும் அபிவிருத்தி திட்டங்கள் இடம்பெறவில்லை. எம்மால் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களுக்கே திறப்பு விழா நடத்துகின்றனர். என்றார். (எ-44)



## பி.சி.ஆர்.இயந்திரத்தில் மீண்டும் கோளாறு

கொழும்பு, நவ.16
தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டு அண்மையில் திருத்தப்பட்ட முல்லேரியா மருத்துவமனையில் உள்ள பிரதான பி.சி.ஆர் இயந்திரத்தில் மீண்டும் கோளாறு ஏற்பட்டுள்ளது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.
பெரும்பாலும் இந்த இயந்திரத்தை மீள இயங்கக் கூடிய வகையில் திருத்த முடியும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.
இந்த பி.சி.ஆர். இயந்திரம் பழுதடைந்ததை அடுத்து, அதைத் திருத்துவதற்கு சீனாவில் இருந்து குழுவொன்று வந்திருந்தது.
இயந்திரத்தைத் திருத்திய குழு, இயந்திரம் வைக்கப்பட்டிருந்த மேசையின் சமநிலையின்மையே பழுதுக்குக் காரணம் என்று கூறியிருந்தது. (எ-இ)

## கொரோனாப் பரவலால்
## பொருளாதார நெருக்கடிக்குள் கடற்றொழிலாளர் குடும்பங்கள்

கொழும்பு, நவ.16
கொரோனாப் பரவலால் நாட்டில் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் கடற்றொழிலாளர்களின் குடும்பங்கள் பெரும் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளனர் என தேசிய கடற்றொழில் உதவியாளர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.
பேலியகொட மீன் சந்தையில் கோவிட் 19 தொற்றுறுதியானவர்கள் அடையாளம் காணப்பட்டமையால் மக்கள் கடல் உணவுகளை கொள்வனவு செய்யாமை காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது. நிரம்பல் செய்யப்படும் கடல் உணவுகளில் 70 சதவீதத்தை அவர்கள் விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

## கொரோனாவால் உயிரிழப்பவர்களின் சடலங்களைப் புதைப்பதற்கு ஆதரவு

கொழும்பு,நவ.16
கொரோனா வைரஸ் காரணமாக உயிரிழப்பவர்களின், சடலங்களை அடக்கம் செய்வதற்கு ஆதரிக்கின்றேன் என்று காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.
அரசு அனைத்து மக்களதும் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.
அதேவேளை கொரோனா வைரஸ் காரணமாக இறக்கும் முஸ்லிம்களின் சடலங்களை அடக்கம் செய்ய இடமளிக்குமாறு முஸ்லிம் மதத் தலைவர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

## இலங்கையில் மின்சாரத்துக்கு தட்டுப்பாடு


கொழும்பு, நவ.16
நுரைச்சோலையிலுள்ள லக்விஜய நிலக்கரி மின்சார நிலையத்தின் ஒரு அலகு மட்டுமே தற்போது செயற்பட்டு வருவதால் நாட்டில் மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்று ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.
இந்த மின்சார நிலையத்தில் மூன்று அலகுகள் உள்ளன. இவை மூன்றும் ஒன்றாக தேசிய ரீதியில் 900 மெகாவோட் மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றன. இதில் இரண்டு அலகுகள் மூடப்பட்டதன் காரணமாக 600 மெகாவோட் மின்சாரத்துக்கு தற்போது பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.
கடந்த வாரம் மத்திய பகுதியில் ஒரு கொதிகலன் குழாயில் ஏற்பட்ட கசிவுக்குப் பின்னர் இந்த இரண்டு அலகுகளும் மூடப்பட்ட நிலையில் இந்த மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. (ற-இ)



# அரசமைப்புக்கு முன்மொழிவுகள் அனுப்பும் காலம் மேலும் நீடிப்பு

கொழும்பு, நவ.16
புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்காகப் பொதுமக்கள் முன்மொழிவுகளை வழங்குவதற்கான கால எல்லையை மேலும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று நீதி அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான அலி சப்ரி தெரிவித்துள்ளார்.
புதிய அரசமைப்பை வரைவதற்காக ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தலைமையில் 9 பேர் கொண்ட நிபுணர்கள் குழுவொன்று அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ளது.
இந்தக்குழு வரைவைத் தயாரிப்பதற்கு பொதுமக்களின் முன்மொழிவுகளைச் செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், அதற்கு எதிர் வரும் 30 ஆம் திகதி வரையில் கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.
எனினும் நாட்டில் ஏற்பட்டுள்ள தற்கால சூழல்களுக்கு அமைவாக, அந்தக் கால அவகாசத்தை மேலும் நீடிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. எதிர்வரும் டிசெம்பர் மாத இறுதி வரையில் முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கான கால எல்லையை அதிகரிப்பதற்கே பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கான உத்தியோக பூர்வமான அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று நீதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.
புதிய அரசமைப்பு வரைவைத் தயாரிப்பதற்காக அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புகள் மற்றும் பொதுமக்களிடத்திலிருந்து அரசின் தன்மை, அடிப்படை உரிமைகள், மொழி, அரச கொள்கைகள், நிறைவேற்றுத்துறை, சட்டவாக்கத்துறை, வாக்களிப்புத்தத்துவம் மற்றும் மக்கள் கருத்துக் கணிப்பு, அதிகாரத்தைப் பன்முகப்படுத்தல், நீதித்துறை, பகிரங்க நிதி, பொதுமக்கள் பாதுகாப்பு உட்பட அக்கறை செலுத்தப்பட வேண்டிய பிற விடயங்கள் தொடர்பில் முன்மொழிவுகள் கோரப்பட்டுள்ளன. (எ-இ)

# 1960இல் தென்பட்ட கொரோனாவே புதுவடிவில் இப்போது மிரட்டல்!



கொழும்பு, நவ.16

தற்போது உலகையே அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் 1960 ஆம் ஆண்டில் வேறு வடிவத்தில் அடையாளம் காணப்பட்டது என்று கொழும்பு மருத்துவ பரிசோதனை நிறுவனத்தின் மருத்துவ ஆய்வக வித்தியாலயத்தின் பாடசாலை பிரிவு பிரதானி ஜானகி சேனாநாயக்க தெரிவித்தார்.

சமூக ஊடக கலந்துரையாடலில் இணைந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, இந்தக் கொரோனா வைரஸ் முதல் முறையாக 1960ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. 2002 ஆம் ஆண்டு சீனாவின் ஒரு பகுதியில் முதலாவது நோயாளி அடையாளம் காணப்பட்டார்.

அதனை சார்ஸ் வைரஸ் என உலக சுகாதார அமைப்பு தெரிவித்தது. அதன் பின்னர் 2012 ஆம் ஆண்டு சவூதியில் வேறு முறையில் இந்த வைரஸ் பரவல் ஏற்பட்டது. 2015 ஆம் ஆண்டு டிசம்பர் முதலாம் திகதி மீண்டும் சீனாவில் இருந்து சார்ஸ்-2 வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். அந்த வைரஸ் மாற்றம் பெற்று 2020 ஆம் ஆண்டு கொரோனா வைரஸ் தொற்றாக மாற்றமடைந்துள்ளது -என்றார். (ற-இ)

# போலி நாணயத்தாள்; மோசடிக் குழு கைது!

கொழும்பு, நவ.16

இலங்கையில், அமெரிக்க டொலரைப் போன்று போலி நாணயத்தாள்களை அச்சடித்து அவற்றை இலங்கையிலுள்ள செல்வந்தர்களிடம் வழங்கி இலங்கைக் காசாக மாற்றிவந்த குழுவொன்று நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய நான்கு பேர் கொண்ட குழுவே சாலியபுர இராணுவ முகாமுக்கு அருகில் வைத்து கைதுசெய்யப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மோசடிக் குழுவைச் சேர்ந்தவர்கள் தங்களைப் பொலிஸ் அதிகாரி, வர்த்தகர்கள் போன்று காட்டிக்கொண்டனர் எனவும் தெரியவருகின்றது. (ற-இ)

# செட்டிகுளம் - மெனிக்பாம் வீதிக்கு காப்பெற்

வவுனியா, நவ.16

வவுனியா செட்டிகுளம் மெனிக்பாம் பகுதிக்கான 1.9கிலோ மீற்றர் பிரதான வீதியைக் காப்பெற் வீதியாக அபிவிருத்தி செய்யும் ஆரம்ப நிகழ்வு நேற்று இடம் பெற்றது.

ஜனாதிபதியின் விஷேட வீதி அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் நாடுதழுவிய ரீதியில் மேற்கொள்ளப்படுகின்ற ஒரு இலட்சம் வீதி அபிவிருத்தி வேலைத்திட்டத்தினூடாக அந்த வீதி அபிவிருத்தி செய்யப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவருமான காதர் மஸ்தான் கலந்துகொண்டார். (ப)





# கொரோனா அச்சத்தால் மனநல பிரச்சினைகள்

## *எச்சரிக்கிறார் மனநல மருத்துவர்*

**கொழும்பு, நவ.16**

**கொரோனாத் தொற்றால் ஏற்பட்டுள்ள அச்சம் காரணமாக மூன்று மனநிலை தொடர்பான பிரச்சினைகளை மக்கள் எதிர்நோக்கியுள்ளனர் என கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும், கொழும்பு தேசிய மருத்துவ மனையின் மனநல மருத்துவ ஆலோசகருமான மஹேஷ் ராஜசூரிய தெரிவித்துள்ளார்.**

கொரோனா வைரஸ் தொற்றால் அதற்கு அடுத்ததாக எனக்கு என்ன நடக்கும்? எனக்கு நெருக்கமானவர்களுக்கு என்ன நடக்கும் அவர்கள் இறந்து விடுவார்களா? என்ற இரண்டு பிரதான மனநல பிரச்சினைகளை மக்கள் எதிர்கொள்கின்றனர்.

இந்த அச்சங்களை சரியான திசை நோக்கிக் கையாண்டு பாதிப்பைக் குறைக்க முடியும். எனது உயிர் தொடர்பாக என்னிடம் இருக்கும் கட்டுப்பாடு என்னை விட்டு நீங்கி விடுமா? என்பது மூன்றாவது அச்சம், இதற்குப் பதிலளிப்பது சிரமமானது. எது எப்படி இருந்த போதிலும் மக்கள் இந்தச் சந்தர்ப்பத்தில் கொரோனா பரவலைத் தடுப்பதற்காக சுகாதார பாதுகாப்பு முறைகளை சரியாகப் பயன்படுத்துவது முக்கியமானது. அத்துடன் கொரோனா நோய் தொடர்பாக தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்திக்கொள்வது பொருத்தமற்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

# சுயதனிமையில் விலைமாதுகள்!

கொழும்பு, நவ.16

தலைநகர் கொழும்பு உட்பட அதனை அண்டிய நகர்ப்பகுதிகளில் நடமாடும் பாலியல் தொழிலாளர்களால் கொரோனா வைரஸ் பரவும் அபாயம் உள்ளது. அதனால் அவர்களை வீடுகளுக்குள்ளேயே சுயதனிமைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதற்கு முன்னர் பல தடவைகள் இவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளபோதிலும் மீண்டும், மீண்டும் அந்தத் தொழிலிலேயே ஈடுபட்டுவருகின்றனர் எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

கொரோனா வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்துவதற்காக நாடு முழுவதும் தனிமைப்படுத்தல் சட்டதிட்டங்கள் கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் அந்தச் சட்ட விதிமுறைகளை மீறி கொழும்பு, மருதானை, தெஹிவளை மற்றும் கல்கிசை ஆகிய பகுதிகளில் பாலியல் தொழிலாளர்கள் நடமாடுகின்றனர் என தகவல்கள் கிடைத்துள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்களால் ஏதேனுமொரு விதத்தில் வைரஸ் பரவும் அபாயம் இருப்பதாலேயே அவர்கள் சுயதனிமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (எ-44)

# மைத்திரியின் அனுமதியுடனே சரிஅ பல்கலைக்கு காணி?

## ஆணைக்குழுவில் காணி சம்பந்தமான பணிப்பாளர் நாயகம் சாட்சியம்

மட்டக்களப்பு, நவ.16

சர்ச்சைக்குரிய மட்டக்களப்பு சரிஅ பல்கலைக்கழகத்துக்கு காணி வழங்குவதற்கான அனுமதி முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் வழங்கப்பட்டது என மகாவலி அபிவிருத்திச் சபையின் காணி சம்பந்தமான பணிப்பாளர் நாயகம் அசங்க உதயகுமார தெரிவித்துள்ளார். ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்திவரும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்றுமுன்தினம் ஆஜராகி சாட்சியமளித்தபோதே அவர் இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

மேலும், தொழிற்பயிற்சி நிலையமொன்றை ஆரம்பிக்க 35 ஏக்கர் காணி தேவையென மகாவலி அபிவிருத்தி அதிகார சபையிடம் 2012ஆம் ஆண்டு மார்ச் 5 ஆம் திகதி முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லா கோரியிருக்கின்றார்.

இந்தக் கோரிக்கை தொடர்பான பணிப்புரை அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வாவிடமிருந்து கிடைத்த நிலையில், இந்தக் காணியை அனுமதிப்பதற்கான ஆவணத்தில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் கையெழுத்திட்டுள்ளார் என பணிப்பாளர் தனது சாட்சியத்தில் கூறியுள்ளார். (ரு -இ)

# உருளைக் கிழங்கு விதைகள் விரைவில் பயனாளிகளுக்கு

யாழ்ப்பாணம், நவ.16

வடக்கு விவசாயிகளுக்கு மானிய அடிப்படையிலான உருளைக் கிழங்கு விதைகள் விரைவில் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

சில வாரங்களில் விதைகளைப் பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகின்றது என்று தெரிவிக்கப்படுகிறது .

கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி அதற்கான உறுதியை வழங்கியுள்ளார். (ப-20)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# 'கத்தியைத் தீட்டாதே புத்தியைத் தீட்டு'

இந்த வருடம் யாழ்ப்பாணத்தில் தீபாவளிக்கு கோயிலுக்குப் போய் வழிபாடு செய்து கொண்டாடத் தடை இருப்பதால், வாள்வெட்டு வித்தையைக் காட்டிக் கொண்டாடியிருக்கிறார்கள். தீபாவளிக்கு முதல் நாளிரவு முதல் நேற்றுவரை சுழிபுரம், துன்னாலை, கோப்பாய், பளை என்று இந்த வாள் வெட்டுக் கொண்டாட்டப் பட்டியல் நீள்கின்றது. மூன்று உயிர்கள் அநியாயமாகப் பறிக்கப்பட்டிருக்கின்றன. சுமார் 20 பேர் வரையில் காயமடைந்துள்ளனர். பலர் கைதாகி சிறைக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

தீபாவளிப் பண்டிகையின் நோக்கமே தீமை இருள கற்றி மகிழ்வெனும் ஒளியை எங்கும் பரப்புவது தான். அதற்காகத்தான் நரகாசுரனை கிருஷ்ண பரமாத்மா வதம்செய்த கதையையும் தீபாவளிக்கான ஐதீகமாகச் சொல்லப்படுகின்றது. ஆனால் நாமோ நரகாசுரர்களாக மாறிக்கொண்டிருக்கிறோமே தவிர, ஒளியைப் பரப்புவதற்கான எந்தவொரு எத்தனத்தையும் செய்வதாக இல்லை என்பதையே இந்தத் தொடர் வாள்வெட்டுக் கலாசாரம் உணர்த்தி நிற்கின்றது.

கொரோனா என்ற கொடிய நோயால் தினமும் இலங்கையில் குறைந்தது 5 பேராவது செத்து விழுந்து கொண்டிருக்கும் நிலையில், நீக்கமற கொரோனாவின் கால்பதிப்பு நிகழ்ந்து கொண்டிருக்கும் இக்கட்டான சூழலில் நாமோ இன்னமும் காட்டுமிராண்டிகள் போல வாள்களை வீசி, உயிர்களைப் பறித்துக் கொண்டிருக்கிறோம். கோயிலுக்கே ஐந்து பேர்தான் போகலாம் என்ற கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள காலத்தில், ஒரு குடும்பத்தை வெட்டி வீழ்த்த 20 க்கும் அதிகமானோர் கும்பலாக வாளேந்திக்கொண்டு போயிருக்கிறார்கள். எமது சமூகம் வன்முறைகளால் கட்டமைக்கப்பட்ட ஒன்றாக மாறிக் கொண்டிருப்பதையே இது உணர்த்துகின்றது.

சில மாதங்களுக்கு முன்னர் வரை ஆவா குழு என்ற வாள்வெட்டுக் கும்பல் யாழ்ப்பாணத்தில் அட்டகாசம் செய்துகொண்டிருந்தது. செவ்வாயில் குடியேற உலகத்தவர்கள் நாள் குறித்துக் கொண்டிருக்கையில் இது போன்ற வாள்வெட்டுக் குழுக்கள், நம் சமூகத்தைக் கற்காலத்துக்கு பின்கொண்டு செல்லும் பணிகளில் இறங்கியிருந்தன. ஆயினும் தற்போது அந்தக் குழுக்களின் கொட்டம் ஓரளவு அடங்கி, மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கும் சமயத்தில், இது போன்ற உள்ளூர் வன்முறைகள் அதற்கு ஆப்பு வைத்துள்ளன.

பழிக்குப் பழி, இரத்தத்துக்கு இரத்தம் என்ற குரூர மனோநிலை எம்மிடம் மீண்டும் வரத் தொடங்கி விட்டது. இப்படி எல்லாக் கோபங்களுக்கும் வாள்களால்தான் பதில் சொல்லிக் கொண்டிருப்போமானால், தமிழர்கள் எல்லாம் காட்டுமிராண்டிகள், அவர்களைக் கொடூரமாக ஆயுதமுனையில் அடக்கியதில் தவறேயில்லை என்று ஒட்டுமொத்த உலகமுமே எண்ணவும் கூடும். வன்முறைதான் எல்லாவற்றுக்கும் தீர்வு என்ற தவறான கருதுகோளை முதலில் கைவிட வேண்டும். இந்த உலகில் எந்த வன்முறையும் சாதிக்காதவற்றை அன்பு சாதிக்கும் என்பதை உணருங்கள். போர்களில் வேண்டுமானால் வீரத்தைக் காட்டலாம், ஊர்களில் காட்டத் தேவையில்லை. இப்போது கொல்லப்பட்ட உயிர்களின் பெறுமதியை எதைக்கொண்டு ஈடுசெய்ய முடியும் என எண்ணிப் பார்த்தாலே வாளைத்தொடகைகள் கூசும். வாள்களைத் தூர எறிந்துவிட்டு, எம் மினத்தின் இருப்பையும், பெருமையையும் உலகறியச்செய்யும் வரலாற்றுக் காரியங்களில் ஒன்றாக வடம் பிடியுங்கள்.

எம்.ஜீ.ஆர் பாடல் ஒன்றின் வரிகள்தான் இப்போதைக்குப் பொருத்தமானவை. 'கத்தியைத் தீட்டாதே புத்தியைத் தீட்டு'

# மக்களைத் தொடர்ந்து ஏமாற்ற முடியாது

## தேசிய மக்கள் சபை எச்சரிக்கை



கொழும்பு, நவ. 16

இனவாதம் மற்றும் மத வாதங்களால் நாட்டு மக்களைத் தொடர்ந்தும் ஏமாற்ற முடியாது என்று தேசிய மக்கள் சபையின் தலைவர் சமீர பெரேரா தெரிவித்துள்ளார்.

இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்த காரணத்தால், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை, அந்நாட்டு மக்கள் தோற்கடித்தனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

டொனால்ட் ட்ரம்ப் போன்ற ஒருவருக்கு, தனது முதலாவது பதவி காலத்திலேயே வீட்டுக்குச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டதை, அமெரிக்காவிடம் இருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

இதனால், ஜன்னல், வாசல் கதவுகளைப் பலமாக வைத்துக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

### 750 வழித்தட பஸ் ஒன்றின்

# சாரதியும், நடத்துநரும் 14 நாள்கள் தனிமையில்!

## சுகாதார அறிவுறுத்தல்களை மீறியதால் நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ. 16

யாழ்ப்பாணம் பருத்தித்துறை சேவையில் ஈடுபடும் 750 வழித்தட தனியார் பஸ் ஒன்றின் சாரதியும், நடத்துநரும் தனிமைப்படுத்தல் சுகாதார நடைமுறைகளை மீறிச் செயற்பட்டதை அடுத்து 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்ட நிலையில், அவர்களைத் தனிமைப்படுத்தும் அறிவித்தல் நேற்று வழங்கப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தல் சுகாதார நடைமுறைகளை மீறி அவர்கள் பயணிகள் பஸ் சேவையில் ஈடுபட்டதை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சாரதியும், நடத்துநரும் தனிமைப்படுத்தப்பட்ட அதே நேரம், அவர்களின் பஸ் தடத்துக்கான அனுமதியும் இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (எ-26)



# ஜனாதிபதி விசேட உரை

கொழும்பு, நவ. 16

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நாட்டு மக்களுக்கு விசேட உரை நிகழ்த்தவுள்ளார் என்று ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய அவர் நாளை மறுதினம் புதன்கிழமை இரவு 8.30 மணிக்கு விசேட உரை நிகழ்த்தவுள்ளார்.

கொரோனாத் தொற்று நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. (க-இ)

# வெட்டுப்புள்ளிகளில் சிக்கல்; மாணவர்கள் முறையிடலாம்

கொழும்பு, நவ. 16

2019 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை முடிவுகளின்படி, பல்கலைக்கழக நுழைவு மற்றும் வெட்டுப் புள்ளிகளில் சிக்கல் உள்ள மாணவர்கள் முறைப்பாடுகளைத் தெரிவிக்க முடியும்.

எதிர்வரும் நவம்பர் 23 ஆம் திகதிக்கு முன்னர் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தொலைபேசி இலக்கங்கள் மற்றும் மின்னஞ்சலுடன் தொடர்புகளை ஏற்படுத்தி முறையிடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைவாக 0112695301, 0112695302, 0112692357, 0112675854 என்ற தொலைபேசி இலக்கங்களினூடாகவும், appeals@ugc.ac.lk என்ற மின்னஞ்சல் மூலமாகவும் தொடர்புகொண்டு உதவிகளையோ அல்லது முறைப்பாடுகளையோ பதிவுசெய்ய முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 2020
"காடு நம் தாய். தாயிடத்தில் பால் குடிக்கலாமே தவிர, நாம் அவளின் இரத்தத்தையே உறிஞ்சிவிடக்கூடாது"- தமிழகக் கவிஞர் அறிவுமதி

# ஒத்துழைப்பு வழங்காது அரசைக் குறைகூறாதீர்

## இராஜாங்க அமைச்சர் சான் நிஷாந்த விசனம்

கொழும்பு, நவ. 16
கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்த அரசு நெருக்கடியான சூழ்நிலையிலும் கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. எனவே போலியான குற்றச்சாட்டுகளை முன்வைப்பதை எதிர்த்தரப்பினர் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று கிராமிய மற்றும் பிரதேச குடிதண்ணீர் வழங்கல் கருத்திட்ட இராஜாங்க அமைச்சர் சான் நிஷாந்த தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலகளாவிய ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள கொவிட்-19 வைரஸ் தாக்கத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சி அரசா, பொதுஜன பெரமுன அரசா அல்லது மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான அரசா எனத் தெரியாது. உலக வல்லரசு நாடுகளில் ஆட்சி மாற்றம் ஏற்படுவதற்கு கொவிட்-19 வைரஸ் தாக்கம் பிரதான காரணியாக இருந்துள்ளது.

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்த நெருக்கடியான நிலையில் அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளில் எதிர்த்தரப்பினர் குறைபாடுகளை மாத்திரம் காண்கிறார்கள். எவ்வித ஒத்துழைப்பும் வழங்கவில்லை.

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தைக் கொண்டு, அரசியல் இலாபம் தேடுவதை எதிர்த்தரப்பினர் தவிர்த்துக் கொள்ள வேண்டும் . வெகுவிரைவில் தற்போதைய நெருக்கடி நிலையை வெற்றிக் கொள்ள முடியும் என எதிர்பார்க்கிறோம்- என்றார்.

(க-இ)



# சூறைக் காற்றில் சிக்கி ரோலர் படகு கடும்சேதம்

### *மயிலிட்டியில் சம்பவம்*

மயிலிட்டி, நவ.16
சீரற்ற காலநிலை காரணமாக வீசிய சூறைக்காற்றில் சிக்கி மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்தில் கட்டியிருந்த ரோலர் படகு உடைந்து பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் வீசிய சூறை காற்றினால் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பில் சிக்கியே மயிலிட்டியைச் சேர்ந்த சுப்பிரமணியம் றசியசிங்கம் என்பவருக்குச் சொந்தமான 28 அடி நீளமுடைய ரோலர் படகு பலத்த சேதத்திற்குள்ளாகியது.

மீன்பிடி நடவடிக்கைக்காக கடலுக்குச் சென்ற சில மீனவர்கள் நேற்று அதிகாலை கரை திரும்பிய போதே ரோலர் கடல் நீரில் மூழ்கிக்கொண்டிருப்பது கண்டறிப்பட்டது . அதன் பின்னர் ரோலரில் இருந்த மீன்பிடி வலை உள்ளிட்ட உபகரணங்கள் வேறு படகு ஒன்றின் உதவியுடன் இறக்கப்பட்டு நிறைந்திருந்த நீரும் வெளியேற்றப்பட்டு ரோலர் கரைக்குக் கொண்டுவரப்பட்டது.

மயிலிட்டித் துறைமுகத்தில் அமைக்கப்பட்டிருக்கும் கல் அணையில் ஏற்பட்டிருக்கும் சேதத்தை சரிசெய்யாமையே துறைமுகப் பகுதிக்குள் அலையின் தாக்கம் வலுவாக உணரப்பட்டமைக்குக் காரணம் எனவும், துறைமுக அபிவிருத்தியின்போது குறித்த கல் அணையில் ஏற்பட்ட சேதத்தை முன்னுரிமை அடிப்படையில் சீர்செய்யுமாறு கோரியபோதும், இதுவரை அது சீர்செய்யப்படவில்லை எனவும் பிரதேச மீனவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ப-26)

# இலங்கை உட்பட 47 நாடுகளுக்கு தொடர்ந்தும் ஜி.எஸ்.பி வரிச்சலுகை

## பிரிட்டன் அரசு அறிவிப்பு

கொழும்பு, நவ. 16
**ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறியபோதும், இலங்கை உள்ளிட்ட வளரும் நாடுகளுக்கு வழங்கப் பட்டு வந்த ஜி.எஸ்.பி வரிச்சலுகைகளை பிரிட்டன் தொடர்ந்தும் வழங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**



இதன் மூலம் வளரும் நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் மீதான கட்டணங்களை நீக்குதல் மற்றும் குறைத்தல் ஆகியவை தொடரும் என்று பிரிட்டன் அரசு அறிவித்துள்ளது.


தற்போது ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பியின்கீழ் அனைத்து நாடுகளும் பிரிட்டனின் சலுகைகளைத் தொடர்ந்தும் பெறுவதற்கு தகுதியைப் பெற்றுள்ளன என்று பிரிட்டனின் சர்வதேச வர்த்தக செயலாளர் லிஸ் ட்ரஸ் தெரிவித்துள்ளார்.

இதனால் இலங்கை உட்பட்ட நாடுகளுக்கு இடையிலான வணிக நடவடிக்கைகள் எந்தவித இடையூறும் இல்லாமல் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உலகின் குறைந்த வளர்ச்சியடைந்து வரும் 47 நாடுகள் பிரிட்டனின் இந்தச் சலுகையை தொடர்ந்தும் பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க- இ)

# கிரிக்கெட் வீரர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை



கொழும்பு, நவ. 16
இலங்கை தேசிய கிரிக்கெட் அணியின் வீரர்கள் பயிற்றுவிப்பாளர் குழாம் மற்றும் உதவியாளர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை நடாத்தப்பட்டுள்ளது. பல்லேகலே பகுதியில் இந்தப் பரிசோதனை நடாத்தப்பட்டுள்ளது.

தென் ஆபிரிக்காவுக்கு இலங்கை அணி கிரிக்கெட் விஜயம் செய்ய உள்ள நிலையில், இந்தப் பரிசோதனை நடாத்தப்பட்டுள்ளது.

இலங்கை அணியின் நட்சத்திர கிரிக்கெட் வீரர் நிரோசன் திக்வெல்ல, தனக்கு பி.சி. பரிசோதனை நடாத்தப்பட்ட விதம் தொடர்பில் காணொளியொன்றை வெளியிட்டுள்ளார். (க-இ)

# விவசாயக் காணியின் வேலி அளம்பிலில் வெட்டிச் சாய்ப்பு



முல்லைத்தீவு, நவ.16
தனிநபர் ஒருவரின் விவசாயக் காணியைச் சுற்றி அமைக்கப்பட்ட வேலி வெட்டிச் சாய்க்கப்பட்டுள்ளதுடன், அந்தக் காணியில் நடப்பட்டிருந்த தூண்களும் அடித்து நொருக்கப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் முல்லைத்தீவு அளம்பில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அளம்பில் பகுதியில் காணிக்கு உரித்தான ஒருவரின் காணியைப் பலர் அடாத்தாகப் பிடிக்க முற்பட்டுள்ளார்கள். எனினும் காணியின் உரிமையாளர் அந்தக் காணியில் நிலக்கடலைச் செய்கை மற்றும் தெங்குச் செய்கையை மேற்கொண்டு சுற்றிவர தூண்கள் நட்டு வேலி அடைத்துள்ளார். இதனை அடுத்தே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ப-19)

# இணையப் பாவனை இலங்கையில் அதிகரிப்பு




கொழும்பு, நவ. 16
கொரோனாத் தொற்றால், இலங்கையில் இணையப் பாவனை அதிகரித்துள்ளது என்று இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தரவு (data) பாவனை 25 தொடக்கம் 30 சதவீதமாக அதிகரித்துள்ளது என்று இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஓசத சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

எனவே சாதாரண விலைக்கு இணைய அணுகலுக்கான வாய்ப்பளித்தமை, நாடு என்ற ரீதியில் பெற்றுக்கொள்ளப்பட்ட வெற்றி என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(க-இ)

# யாழ்.பூவரம் தீவில் டைனமைட் மீட்பு



கொடிகாமம், நவ.16
சட்டவிரோத மீன்பிடிக்குப் பயன்படுத்தப்படும் டைனமைட் மற்றும் டினன்டி வெடி பொருள்கள் யாழ்.பூவரசம் தீவுப் பகுதியில் மீட்கப்பட்டுள்ளன என்று கடற்படையினர் தெரிவித்தனர்.
அந்தப் பகுதியில் உள்ள பற்றைக் காட்டில் அந்தப் பொருள்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளன என்று கடற்படைக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய அந்த இடம் முற்றுகையிடப்பட்டு குறித்த பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன என்று கடற்படையினர் தெரிவித்தனர். (ப-159)

# சட்டவிரோத கடற்றொழிலை ஊக்குவிக்கின்றாரா டக்ளஸ்

## வடக்கு முன்னாள் உறுப்பினர் ரவிகரன் சந்தேகம்



முல்லைத்தீவு, நவ. 16
**வடமாகாண ரீதியாக நிபந்தனைகளுடன் கூடிய அட்டைத் தொழிலுக்கு அனுமதி வழங்கப்படவுள்ளது என கடற்றொழில் அமைச்சர் அறிக்கை வெளியிட்டுள்ளார். எனவே கடற்றொழில் அமைச்சர்தான் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளை ஊக்குவிக்கின்றாரா என்று வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றார்களே தவிர, கடற்றொழில் அமைச்சோ, அல்லது கடற்றொழில் திணைக்களமோ சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளை கட்டுப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. எமது மீனவர்கள் எமது கடற்பரப்பில் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டாம் என்றுதான் கேட்கின்றனர். ஒரு தமிழர் கடற்றொழில் அமைச்சராக இருந்துகொண்டு இந்தச் சட்ட விரோத தொழில் நடவடிக்கைகளை ஊக்குவிக்கின்றாரா என்று தான் கேள்வி எழுப்பவேண்டியுள்ளது. நிபந்தனைகளுடன் அட்டைத் தொழில் செய்ய முல்லைத்தீவு மாவட்டத்தில் வழங்கப்பட்டால், மாவட்ட கடற்றொழிலாளர் சமாசம் மற்றும் சம்மேளனம் உள்ளடங்கலாக மீனவர்களுடன் இணைந்து பெரும் போராட்டத்தை மேற்கொள்வோம் - என்றார். (ப-246)

# முகக்கவசங்கள், தொற்றுநீக்கி வழங்கல்

மருதங்கேணி, நவ.16
மருதங்கேணி பிரதேச மருத்துவமனைக்கும், மருதங்கேணி சந்தை வியாபாரிகளுக்கும் முகக் கவசங்கள் மற்றும் தொற்று நீக்கும் திரவங்கள் நேற்று வழங்கப்பட்டன.
வடமராட்சி கிழக்கு பிரதேச லயன்ஸ் கழக ஏற்பாட்டில் வடமராட்சி.நெல்லியடி லயன்ஸ் கழகத்தினர், பளைப் பொலிஸார், மருதங்கேணி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையினர் இணைந்து அவற்றை வழங்கினர்.
வடமராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத் தலைவர் லயன் வே.பிரசாந்தன் தலைமையில், மருதங்கேணி பிரதேச மருத்துவமனையிலும் மருதங்கேணி மரக்கறிச்சந்தைப் பகுதியிலும் நிகழ்வு இடம்பெற்றது.
இதில் முகக்கவசங்களை பிராந்திய தலைவர் லயன் வே. பரமேஸ்வரன், ஆளுநர் சபை மாவட்ட பிராந்திய தலைவர் லயன் சிறிபவன், நெல்லியடி வட்ட தலைவர் வே. தவச்செல்வம், வடமராட்சி கிழக்கு தலைவர் வே. பிரசாந்தன், முன்னாள் தலைவர்களான ச.திரவியராசா, எஸ்.தியாகலிங்கம், பளை பொலிஸ் பொறுப்பதிகாரி உட்பட பலரும் கலந்து கொண்டனர். (ப-160)

# கடலில் மூழ்கடிக்கப்பட்ட பழைய இ.போ.ச.பஸ்கள்



கொழும்பு,நவ.16
இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான, பழைய பஸ்கள் திருகோணமலைக் கடற்பகுதியில் மூழ்கடிக்கப்பட்டுள்ளன.
கடலில் குப்பைகள் சேர்வதைத் தடுப்பதற்குப் பல்வேறு முயற்சிகளை உலக நாடுகள் மேற்கொண்டிருக்கும் நிலையில், கடல் வளங்களை பாதுகாப்பதற்கு இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பது வழமையாகும்.
இதற்கு முன்னரும் விடுதலைப்புலிகளிடம் இருந்து கைப்பற்றிய கப்பல்கள் மற்றும் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகள் பயன்படுத்திய குண்டு துளைக்காத வாகனங்கள் என்பன நீர்கொழும்பு கடற்பரப்பில் மூழ்கடிக்கப்பட்டன.
இவற்றைத் திருத்துவதற்கு அதிக செலவுகள் ஏற்படும் என்பதாலும், இவ்வாறான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதும் வழமை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-ரி4)

# தனிமைப்படுத்தப்பட்டவர் வர்த்தகச் செயற்பாட்டில்

கொழும்பு,நவ.16
வீட்டில் சுயதனிமையிலிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர், தனது கடையைத் திறந்து வர்த்தக செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளார். இது தொடர்பில் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று மாத்தளை சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி, அநுருத்த பண்டார நாயக்க தெரிவித்துள்ளார்.
பேலியகொட மீன் சந்தைக்குச் சென்ற, பொலிஸ் அதிகாரியொருவருக்கு, கொரோனாத் தொற்று உறுதியாகிய தால், அவரது மகனான, பொலிஸ் கான்ஸ்டபிள் வீட்டில் சுயதனிமைப் படுத்தப்பட்டார்.
இந்த நிலையில், கான்ஸ்டபிள் தனது வீட்டுடன் இருந்த கடையைத் திறந்து வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளார். பிரதேச வாசிகளிடமிருந்து கிடைத்த தகவல்களுக்கமைய, சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸ் குழு கடையை மூடியதுடன், கான்ஸ்டபிளைத் தனிமைப்படுத்தலுக்கு அழைத்துச் சென்றுள்ளது.
அத்துடன், தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியமைக்காக, பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என மாத்தளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (க-இ)

# பேலியகொடவில் புதிய மெனிங் சந்தை

## இவ்வாரம் திறப்பு

கொழும்பு,நவ.16
பேலியகொடவில் புதிய மெனிங் சந்தையின் நடவடிக்கைகள் எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படும் என்று நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.
பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் புதிய மெனிங் சந்தையின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
அன்றைய தினம் சந்தையின் அனைத்துப் பிரிவுகளிலும் குறிப்பிட்டளவு வர்த்தகர்களை மாத்திரம் உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் என்.கே. ரணவீர தெரிவித்துள்ளார்.
சுகாதாரப் பிரிவினரின் பரிந்துரைக்கமைய, ஏனைய வர்த்தகர்களை சந்தைக்குள் அனுமதிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
மெனிங் சந்தையை அண்மித்து சுமார் 100 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டதை அடுத்து, புறக்கோட்டையில் அமைந்துள்ள மெனிங் சந்தை தொகுதியை பேலியகொட பகுதிக்கு மாற்றுவதற்கு அரசு தீர்மானித்தமை குறிப்பிடத்தக்கது. (க-ரி4)

# தேசிய பாடசாலைகளை நிறுவ கண்டிக்கு ரூபா 400 மில்லியன்

கண்டி மாவட்டத்தில் தலா 100 மில்லியன் ரூபா வீதம் 400 மில்லியன் செலவில் 4 தேசிய பாடசாலைகளை நிறுவுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என கல்வி அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.
கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக தேசிய அளவில் செயல்படுத்தப்பட்டு வரும் கிராமிய பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் தேசிய வேலைத்திட்டத்தின்' அபிவிருத்தி நடவடிக்கைகளின் கீழ் கண்டி மாவட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கண்டி மாவட்டம் முழுவதும் கிராம மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கும், செயற்படுத்த வேண்டிய அபிவிருத்தி வேலைத்திட்டமொன்று தொடர்பில் கலந்துரையாடுவதற்கு 'சமூக உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டுக் குழு' நேற்றுமுன்தினம் கண்டி மாவட்டச் செயலகத்தில் கூடியது. இதன்போதே கல்வி அமைச்சின் செயலர் இவ்வாறு தெரிவித்தார்.
அந்தக் கூட்டத்தில் கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தலா 2ஆயிரம் ரூபா வீதம் போஷாக்குப் பொதியை வழக்குவது, ஆயுர்வேதம் என்ற பெயரில் இயங்கும் போலி மசாஜ் பார்லர்கள் மீது சோதனை நடத்தி சட்ட நடவடிக்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பது, மத்திய மாகாணத்தில் பிளாஸ்ரிக், பொலித்தீன் சேகரித்து மீள்சுழற்சி வேலைத்திட்டமொன்றை ஆரம்பிப்பது போன்ற முடிவுகளும் எடுக்கப்பட்டன. (ப)

## யாழ், கிளி. மருத்துவமனைகளில்

# கொரோனா நோயாளர்களுக்கான அவசர சிகிச்சை வழங்க ஏற்பாடு



**கிளிநொச்சி, நவ.16**

**கொரோனாத் தொற்றாளர்களுக்கு அவசர சிகிச்சை தேவைப்படுமிடத்து யாழ். போதனா மருத்துவமனை, கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனை ஆகிய இரண்டையும் தயார் நிலையில் வைக்குமாறு சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.**

கிளிநொச்சி மாவட்டத்தில் 200 கட்டில்கள் வசதிகொண்ட கொரோனாச் சிகிச்சை நிலையம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இச் சிகிச்சை நிலையத்துக்கு அனுமதிக்கப்படுகின்ற கொரோனா நோயாளிகளுக்கான அவசர மருத்துவ தேவைகள் ஏற்படுமிடத்து அதி தீவிர சிகிச்சை மற்றும் பராமரிப்புக்காக அவர்கள் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனை அல்லது யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆகியவற்றுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனைப் பணிப்பாளர் ராகுலனிடம் கேட்டபோது;

குறித்த சுற்றறிக்கை கிடைக்கப்பட்டுள்ளது. அவசர தேவைகருதி மருத்துவமனைக்கு கொண்டுவரப்படும் எந்தவொரு நோயாளியையும் சிகிச்சை வழங்காது வெளியேற்ற முடியாது.

எனினும் கொரோனா நோயாளிகளை மாவட்ட பொது மருத்துவமனைக்குக் கொண்டுவரும்போது, ஏனைய நோய்களுக்கு வரும் நோயாளர்கள், அல்லது விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளர்கள் மருத்துவமனைக்கு வருகை தராமல் விடுவதற்கான சந்தர்ப்பம் ஏற்படும்.

எனவே கொரோனா நோயாளர்களுக்கான அவசர சிகிச்சைப் பிரிவை மாவட்ட மருத்துவமனையில் இல்லாது பிறிதொரு இடத்தில் ஒழுங்கு செய்தால், அதற்கான முழு ஒத்துழைப்பையும் நாம் வழங்கத் தயாராக உள்ளோம் - என்றார். (ப-6)

## ஆசிரியர்களுக்கான இணைய வழிப் பயிற்சி

கொடிகாமம், நவ. 16

முன்பள்ளி மற்றும் ஏனைய ஆசிரியர்களுக்கான இலவச இணையவழிப் பயிற்சி இன்று முதல் வரும் 20ஆம் திகதி வரை 5 நாள்களும் மாலை 4மணி முதல் 5 மணி வரை நடைபெறவுள்ளது.

கொவிட் - 19 சூழலில் பாடசாலை மாணவர்களைச் சிறப்பாகக் கையாள்வதற்கான அடிப்படை உளவியல் திறன்களை வளர்த்தல் எனும் தொனிப்பொருளில் யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் சாந்திகம் உளவளத்துணை நிலையத்தால் இந்தப் பயிற்சி நடத்தப்படுகிறது. பயிற்சியை முழுமையாக நிறைவு செய்யும் ஆசிரியர்களுக்கு கையேடும் சான்றிதழும் ஆசிரியர்களின் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் இணைய விரும்பும் முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் ஏனைய ஆசிரியர்கள் zoom ID 345 435 2211 Code ahc 2020 ஊடாகவும் vmediya @shanthikam.org என்ற மின்னஞ்சல் ஊடாகவும் 021 222 3338, 077406 2211 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடனும் தொடர்பு கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-159)



## நுழைவாயில் சேதமடைந்ததால் சேவைகள் பெறுவதில் சிரமம்

### தருமபுரம் மருத்துவமனையில் இந்த நிலை

கிளிநொச்சி, நவ.16

கிளிநொச்சி, தருமபுரம் மருத்துவமனையின் நுழைவாயில் தற்பொழுது பெய்து வரும் பருவ மழையால் சேதமாயுள்ளதால் மருத்துவமனைக்குச் சென்று சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளோம் என மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கிளிநொச்சி, மாவட்ட மருத்துவமனைக்கு அடுத்த படியாக உள்ள மருத்துவமனையாக தருமபுரம் மருத்துவமனை காணப்படுகிறது.

இங்கு 15க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த மக்கள் சேவைகளைப் பெற்றுக்கொள்கின்றனர். எனினும் தற்போது மழை காரணமாக மருத்துவமனைக்குள் பிரவேசிக்க முடியாதவாறு அதனுடைய நுழைவாயில் பெரும் சேதமடைந்துள்ளது. அவசர தேவை கருதி நோயாளர் காவு வண்டியைக் கூட வெளியில் கொண்டுசெல்லவோ, உட்கொண்டுவரவோ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இதனைக் கருத்தில் கொண்டு உரிய அதிகாரிகள் வெள்ளம் நிரம்பிக் குன்றும் குழியுமாகக் காணப்படும் நுழைவாயிலைச் சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கேட்டுக்கொண்டனர். (ப-113)



அளவெட்டி மேற்கு, தெற்கு ஊடாக மழைகாலத்தில் வெள்ளநீர் வழிந்தோடும் பெரிய மதவடி வாய்க்கால் அந்தப் பகுதி இளைஞர்களால், நேற்றுமுன்தினம் துப்புரவு செய்யப்பட்டது. (ப-36)

## போராடும் உறவுகளுக்கு உலர் உணவுப்பொதிகள்

வவுனியா, நவ.16

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்குகு நீதிகேட்டு வீதியில் போராடும், வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த உறவுகளுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்பாணம் குப்பிளானைப் பூர்வீகமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் பறுவதம் குமாரசாமியின் (முன்னாள் ஆசிரியர் குப்பிழான் விக்கினேஸ்வரா ம.வி) 31ஆவது ஆண்டு நினைவு நாளில் அவரது பிள்ளைகளால் அந்த உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. தலா 2 ஆயிரம் ரூபா பெறுமதியான 64 உலர் உணவுப்பொதிகள், 64 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன. தொடர்ந்து அனைத்து தாய்மார்களுக்கும் மதிய நேர உணவும் பரிமாறப்பட்டது. (ப-6)



## தனிமைப்படுத்தல் பிரதேசங்களுக்கு விசேட அனுமதி

கொழும்பு,நவ.16

கொழும்பில் தனிமைப்படுத்தப்படவுள்ள பகுதிகளிலுள்ள நிறுவனங்கள் மற்றும் அத்தியாவசிய தேவைகள் மற்றும் நீதிமன்ற அலுவல்கள் வழமைபோன்று செயற்படுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

மருதானை பொலிஸ் பிரிவு, கோட்டை பொலிஸ் பிரிவு புறக்கோட்டை பொலிஸ் பிரிவு, கொம்பனித்தெரு பொலிஸ் பிரிவு, டேம் வீதி (ஆட்டுப்பட்டித்தெரு) ஆகிய பொலிஸ் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பிரதேசங்களில் அமைந்துள்ள இலங்கை முதலீட்டுச் சபை (BOI) மற்றும் அபிவிருத்தி சபை (EDB) ஆகியவற்றில் செயல்படும் தொழிற்சாலைகள், நீதி மன்ற அலுவல்கள் மற்றும் அத்தியாவசிய ஏனைய அரச நிறுவனங்கள் செயற்படுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சுகாதார அதிகாரிகளின் கடுமையான கண்காணிப்பு மற்றும் வழிகாட்டி ஆலோசனைகளின் கீழ், நிறுவனங்கள் செயற்படமுடியும் என்று கொவிட்-19 வைரஸ் தொற்றைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் அறிவித்துள்ளது. (க-இ)

## நாடாளுமன்று செல்லும் இறுதி முடிவு பஸிலிடம்

### மஹிந்த தெரிவிப்பு



கொழும்பு,நவ.16

நாடாளுமன்றுக்குச் செல்வது தொடர்பான இறுதி முடிவை பஸில் ராஜபக்ஷவே எடுப்பார் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பசில் ராஜபக்ஷ தேசிய பட்டியல் மூலம் நாடாளுமன்றம் செல்ல வேண்டும் என ஒருமித்த குரலில் வேண்டுகோள் விடுத்துள்ளனர். ஆனால் பஸில் நாடாளுமன்ற அரசியலில் ஈடுபடுவது தொடர்பில் இன்னமும் தீர்மானிக்கவில்லை. இது முற்று முழுதாக அவரே தீர்மானிக்க வேண்டிய விடயம். எதிர்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் இந்த விடயத்தில் ஆர்வம் காட்டியுள்ள போதிலும், பஸில் ராஜபக்ஷ இன்னமும் இந்த விடயத்தில் தனது விருப்பத்தை வெளிப்படுத்த வில்லை.

நாங்கள் இன்னமும் அவரின் தீர்மானத்துக்காகக் காத்திருக்கின்றோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-22)

# உண்மையை ஏற்றுக்கொள்ளாவிடின் தொற்றுப் பரவலைத் தடுக்க முடியாது

### எச்சரிக்கிறது அரச வைத்திய அதிகாரிகள் சங்கம்

**கொழும்பு, நவ.16**

**நாட்டில் சமூகப் பரவல் ஏற்பட்டுள்ளது என்பதை ஏற்றுக்கொள்ளாத வரை, எதிர்காலத்தில் பேலியகொட போன்ற பரவல்கள் ஏற்படுவதைத் தடுக்க முடியாத நிலை ஏற்படும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**



தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவின் பணிப்பாளரால் மேற்கொள்ளப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்தியர் ஹரித அழுத்கே இது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது,

சரியான முறையில் கொரோனா பரிசோதனைகள் மேற்கொண்டிருந்தால் மினுவாங்கொட மற்றும் பேலியகொட கொரோனா பரவலை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்திருக்க வாய்ப்புகள் இருந்தன. சமூக மாதிரி தொற்றுத் தொடர்பில், நோய் விஞ்ஞானப் பிரிவின் பணிப்பாளர் இன்னமும் ஏற்கவில்லை.

இலக்கு ஒன்றை வைத்தே நோயாளிகளைக் கண்டுபிடிக்க வேண்டும். இலக்கை அறிந்து வேலை செய்ய வேண்டும்.

இவ்வாறான கருத்துக்களை வெளியிட்டுக் கொண்டிருப்பதற்குப் பதிலாக இதனை கட்டுப்படுத்துவதற்காக முறை ஒன்றை தயாரித்து முன்வைக்க வேண்டும்.

குறைந்தபட்சம் இந்த சந்தர்ப்பத்திலாவது சமூகப் பரவல் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அதனை ஏற்றுக்கொள்ளாத வரையில் எதிர்காலத்தில் பேலியகொட போன்ற பரவல்கள் ஏற்படுவதைத் தடுக்க முடியாத நிலைமை ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-இ)

## அபிவிருத்திச் செயற்பாடுகளால் அச்சுறுத்தலில் தொல்பொருள்கள்

கொழும்பு, நவ.16

நாட்டில் இடம்பெற்று வரும் பல்வேறு அபிவிருத்திச் செயற்பாடுகள் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகளால் தொல்பொருள் உரிமங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இலங்கை தொல்பொருள் உரிமங்களை முகாமைத்துவம் செய்தல் என்ற பெயரில் கணக்காய்வாளர் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (வ-இ)

## இலங்கைத் தூதரகம் பிரான்ஸில் பூட்டு

கொழும்பு, நவ.16

பிரான்ஸில் தமது தூதரக நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என பாரிஸில் உள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நவம்பர் 13ஆம் திகதி முதல் எதிர்வரும் 27ஆம் திகதி வரையான 14 நாட்களுக்கு தூதரகம் மூடப்பட்டிருக்கும்.

இந்தக் காலப்பகுதியில் வழங்கப்பட்ட அனைத்து விண்ணப்ப அனுமதிகளும் ரத்துச்செய்யப்பட்டுள்ளன. இவற்றுக்கான புதிய திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும். தூதரக சேவைகளுடன் தொடர்புடைய அறிவுறுத்தல்களைப் பெற தூதரக வலைத்தளத்தைப் பார்வையிட முடியும்.

அவசர கொன்சலர் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பான சேவைகளை தொலைபேசி இலக்கம் அல்லது குறுந்தகவல்கள் மூலம் பெற்றுக்கொள்ள முடியும். காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை இந்த சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந -இ)

## வயோதிபர்கள் தொடர்பில் விசேட கவனம் வேண்டும்

கொழும்பு, நவ.16

நாட்டில் உள்ள வயோதிபர்களை கொரோனாத் தொற்றில் இருந்து பாதுகாப்பது தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டும் என சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

60 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் நீண்ட நாள் நோயாளர்கள் போன்றவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்படுமாயின் அபாய நிலை ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுகின்றன என சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்பு பிரிவு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (ந-இ)



## போதைக்கு அடிமையா? அழைக்கலாம் 1927

கொழும்பு, நவ.16

போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகும் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு சிகிச்சை மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குவதற்கு விசேட இலவச தொடர்பு இலக்கத்தை தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை அறிமுகப்படுத்தியுள்ளது. 1927 என்ற இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி 24 மணிநேரமும், இந்தச் சேவையை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பெற்றுக்கொள்ள முடியும். (ற-இ)

## கரையொதுங்கியது அரிய புள்ளிச் சுறா!

கற்பிட்டி, நவ.16

கற்பிட்டி தழுவ கடற்பகுதியில் அரியவகைப் புள்ளிச் சுறா ஒன்று நேற்றுக் காலை உயிரிழந்த நிலையில் கரையொதுங்கியுள்ளது என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சுறா சுமார் 2 ஆயிரம் கிலோ எடையும், 15 அடி நீளமும் உடையதாகக் காணப்படுகின்றது எனவும் மீனவர்கள் தெரிவித்தனர். (ற-இ)

# நிலையான இலக்கையடைய போதிய நிதியுதவி அவசியம்

### வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்தன சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ.16

நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்குத் தடையாக இருக்கும் பன்முக சவால்களை சமாளிப்பதற்காக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு உதவும் அபிவிருத்தி முயற்சிகளுக்கான போதிய நிதியுதவியின் முக்கியத்துவத்தை வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்தன சுட்டிக்காட்டினார்.

கயானா கூட்டுறவுக் குடியரசின் வெளிவிவகார மற்றும் சர்வதேச ஒத்துழைப்புக்கான அமைச்சரின் தலைமையில் 77வது குழுவின் வெளிவிவகார அமைச்சர்களின் 44 ஆவது வருடாந்தக்கூட்டம் மெய்நிகர் இணைய வழியில் நடைபெற்றது.

இந்த உரையாடலானது, முக்கிய முன்னுரிமைப் பிரச்சினைகள் மற்றும் கோவிட்-19 தொற்றுநோய்க்கான உலகளாவிய பிரதிபலிப்பு மற்றும் 2030இல் நிகழ்ச்சி நிரலை அமுல்படுத்துவதற்கும், நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கும் அது ஏற்படுத்தும் தடைகள் என்ற தலைப்பில் நடைபெற்றது.

இம் மாநாட்டில், தொற்றுநோய் மற்றும் வர்த்தகம், சுற்றுலா, முதலீடு மற்றும் வேலை வாய்ப்பு ஆகியவற்றிலான அதன் பாதகமான விளைவுகளின் காரணமாக அதிகரித்த உலகளாவிய சூழ்நிலையின் பின்னணியில் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்குத் தடையாக இருக்கும் பன்முக சவால்களை சமாளிப்பதற்காக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு உதவும் வகையில், அபிவிருத்தி முன்முயற்சிகளுக்கு போதிய நிதியுதவியை வழங்குவதற்காக 77வது குழுவுக்கு அழைப்பு விடுப்பதற்கான முக்கியத்துவத்தை வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்தன மீண்டும் வலியுறுத்தினார். (ந -இ)

## வீடுகளில் நடக்கும் மரணங்களுக்கு பி.சி.ஆர். அறிக்கை கட்டாயம்

கொழும்பு, நவ.16

கொரோனா வைரஸ் பரவும் ஆபத்து காலம் குறையும் வரை வீடுகளில் நடக்கும் மரணங்களைப் பதிவுசெய்வது தொடர்பில் பதிவாளர் நாயகம் புதிய நடைமுறைகளை அறிவித்துள்ளார்.

கிராம சேவகரால் மரணம் தொடர்பான அறிக்கை வழங்கும்போது அந்த மரணம் கொரோனாத் தொற்றால் ஏற்படவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஒருவர் இறந்தால், அந்த மரணம் கொரோனா வைரஸ் தொற்றால் ஏற்படவில்லை என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதுடன் வீடுகளில் நடக்கும் மரணங்களுக்கு கிராம சேவகரின் அறிக்கை அல்லது மருத்துவ அறிக்கைக்கு மேலதிகமாக பி.சி.ஆர் பரிசோதனை அறிக்கைகளையும் பிறப்பு மற்றும் இறப்பு தொடர்பான பதிவுகளை மேற்கொள்ளும் பதிவாளர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் பதிவாளர் நாயகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள் ளார். (ந-இ)



## பஸ்களை கண்காணிக்க நடமாடும் அதிகாரிகள்

கொழும்பு, நவ.16
கொரோனா அச்சுறுத்தல் நிலையில் ஆசன எண்ணிக்கைக்கு மேலாக பயணிகளை ஏற்றும் பேருந்துகளைக் கண்காணிக்க நடமாடும் விசாரணை அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் நிலான் மிரண்டா தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்று பரவுகின்ற நிலைமையிலும், நாட்டின் சில பகுதிகளில் அதிக பயணிகளுடன் பேருந்துகள் பயணிக்கின்றன என முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றமையை அடுத்தே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறி, சேவையில் ஈடுபட்ட பேருந்து ஒன்று, பாணந்துறை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. அதன் சாரதியும் நடத்துநரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)

# குருகுலம் கல்வி சேவை இன்று முதல் ஆரம்பம்!

**கொழும்பு, நவ.16**
**மாணவர்கள் அனைவரும் வீட்டிலிருந்தவாறு கல்வி கற்கும் வகையில் குருகுலம் கல்வி ஒளிபரப்புச் சேவையை கல்வி அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ளது.**

இந்தச் சேவைக்கான ஒளிபரப்பு அட்டவணைகளை, தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது.

தரம் 3 தொடக்கம் தரம் 13 வரையான வகுப்புகளுக்கான தொலைக் கல்வி ஒளிபரப்பு அட்டவணைகளே இவ்வாறு வெளியிடப்பட்டுள்ளன.

இன்று திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை, அதிகாலை 4 மணியிலிருந்து நள்ளிரவு 12 மணி வரை இந்தக் குருகுலம் கல்விச் சேவை முன்னெடுக்கப்படவுள்ளது. நாட்டில் தற்போது நிலவிவரும் கொரோனாத் தொற்று காரணமாக பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டுள்ள நிலையில் மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு கல்வி அமைச்சு இந்த ஒளிபரப்புச் சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது. (ற-இ)

## விதிகளை மீறும் பேருந்துகளின் அனுமதிப்பத்திரங்கள் இரத்து

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாது பயணிக்கும் பேருந்துகளை சுற்றிவளைக்கும் வேலைத்திட்டம் ஒன்று அடுத்த வாரம் முதல் முன்னெடுக்கப்படவுள்ளது என இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாது பயணித்த 5 பேருந்துகளின் அனுமதிப்பத்திரங்கள் இரத்துசெய்யப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ந -இ)



## யாசகர்களும் கைதாவார்

### பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு, நவ.16
கொழும்பின் வீதிகளில் அமைக்கப்பட்டுள்ள வீதி சமிக்ஞை விளக்கு பகுதிகளில் யாசகம் எடுப்பவர்கள் கைதுசெய்யப்படுவார்கள் என பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இவர்கள் மூலம் நோய்த் தொற்றுக்கள் ஏற்படலாம் என்ற அச்சத்தின் காரணமாக அவர்களை கைது செய்யும் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை கொழும்பில் யாசகம் எடுப்போர் பலர் வியாபார நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர் எனத் தகவல்கள் கிடைத்துள்ளன.

இவர்கள் யாசகம் எடுத்து கிடைக்கும் பணத்தை பொதுவில் இருக்கும் ஒருவரிடம் கையளித்து வருவது கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்து உண்மையான யாசகர்கள் கைதுசெய்யப்பட்டு சமூக சேவை திணைக்களத்திடம் கையளிக்கப்படவுள்ளனர். மேலும், போலியான யாசகர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (வ-இ)

## எரிப்பதா? புதைப்பதா? நீடிக்கிறது குழப்பம்

### *பவித்திரா தெரிவிப்பு*

கொழும்பு, நவ.15
கொரோனா வைரஸ் நோயாளிகளின் சடலங்களை அடக்கம் செய்வது குறித்து இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என்று சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்துள் ளார்.

சடலங்களை அடக்கம் செய்வதற்கான அனுமதியை வழங்குமாறு பல தரப்பினர் வேண்டுகோள் விடுத்து வருகின்ற நிலையில், அவர் இதனைத் தெரிவித்துள்ளர்.

இது தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட குழு இன்னமும் பல அறிக்கைகளை சமர்ப்பிக்கவுள்ளது எனவும் அதன் பின்னரே அமைச்சரவை இறுதி முடிவெடுக்கும் எனவும் அவர் மேலும் கூறினார். (ற-இ)

## பெரும் அச்சுறுத்தலில் கொழும்பு மாநகர்

கொழும்பு, நவ.16
கொரோனா பரவலால் கொழும்பு நகரம் பெரும் அச்சுறுத்தலை எதிர்க்கொண்டுள்ளது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் மருத்துவர் கலாநிதி ஹரித அளுத்கே தெரிவித்துள்ளதாவது,

கடந்த 5 நாள்களில் கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் ஆயிரத்து 083 கொவிட் நோயாளிகள் பதிவாகியுள்ளனர். அதையடுத்து அங்கு ஆபத்தான நிலைமை ஏற்பட்டுள்ளது. முன்னர் கம்பஹாவில் காணப்பட்ட அச்சுறுத்தல் மிகுந்த அவதான நிலைமை தற்போது கொழும்பு மாவட்டத்தில் காணப்படுகின்றது.

விசேடமாக அண்மைய நாட்களுக்குள் கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் மாத்திரம் 200 க்கும் அதிகமான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனால் புதிய அவதான வலயங்கள் தொடர்பில் நாம் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. கட்டட நிர்மாண பணிகள் இடம்பெறும் இடங்கள் தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டி யுள்ளது எனத் தெரிவித்தார். (வ-இ)

## ஊரகஸ்மங் சந்தியில் 6 பேருக்குத் தொற்று

ஊரகஸ்மங் சந்தி பகுதியில் 6 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கொரோனாத் தொற்றுக்குள்ளான நபர் ஒருவர் அங்கு சென்று வந்தமை கண்டறியப்படுத்தப்பட்டதையடுத்து அப் பகுதியில் உள்ளவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் சோதனைகளிலேயே இவர்களுக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து அப் பகுதியைச் சேர்ந்த 4 கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. இதேவேளை அப் பகுதிகளுக்கு பயணிப்பதற்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப் பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (வ-இ)

## கொரோனா நெருக்கடியில் மேல் மாகாணம்!

கொழும்பு, நவ.16
கொழும்பு மாவட்டம் உட்பட ஒட்டுமொத்த மேல் மாகாணமும் முழுமையான கொரோனா வைரஸ் எச்சரிக்கையுடைய பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்தத் தகவலை சுகாதார அமைச்சின் தொற்று நோய் ஆய்வுப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் டாக்டர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

இதேவேளை, மேல் மாகாணம் தவிர்த்து ஏனைய மாகாணங்களில் கொரோனாத் தொற்று அச்சுறுத்தல் சற்று குறைவாகவே உள்ளது எனத் தெரிவித்துள்ள அவர், கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்ட பகுதி மக்களை இயன்றவரை வீடுகளில் தங்கியிருக்குமாறும் கோரியுள்ளார். (ந -இ)

# அத்தியாவசிய பொருள்களுக்கு தட்டுப்பாடு உருவாகுமா?

## இறக்குமதியாளர்கள் அச்சம்

கொழும்பு, நவ.16

கொள்கலன்களை இறக்குமதி செய்வதில் மேலும் தாமதம் ஏற்படுமாக இருந்தால் அத்தியாவசிய உணவுப்பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படலாம் என அத்தியாவசிய உணவுப்பொருள்கள் ஏற்றுமதி இறக்குமதி சங்கத்தின் தலைவர் எஸ் இராஜேந்திரன் அச்சம் வெளியிட்டுள்ளார்.

கொழும்பு துறைமுகத்தில் ஏற்பட்டுள்ள கொரோனாப் பரவலால் நாளாந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான போதிய ஊழியர்கள் இல்லாத நிலை உருவாகியுள்ளது.

இதனால் உள்ளூர் சந்தைக்கு நாளாந்தம் அத்தியாவசிய பொருள்களை அனுப்புவதில் நெருக்கடியேற்பட்டுள்ளது. இதுவரையில் 40 கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தில் பொருள்களை இறக்காமல் சென்றுள்ளன.

இது அத்தியாவசிய பொருள்களை இறக்குமதி செய்பவர்களின் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. தங்களின் கையிருப்புகள் முடிவடைவதற்குள் கொள்கலன்கள் கிடைக்கப்போவதில்லை என அவர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். (வ-இ)

## துறைமுக ஊழியர்கள் 200 பேர் தனிமையில்

கொழும்புத் துறைமுக ஊழியர்கள் 200 பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கொழும்புத் துறைமுகத்தில் பணியாற்றும் 61 பேருக்கு இதுவரையில் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர்களில் அதிகமானோர் கொழும்பு, கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவார். இந்நிலையில் இவர்களோடு தொடர்பிலிருந்தவர்களே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (வ-இ)

## தொற்றா நோயுள்ளவர்கள்

# மருந்துகளைப் பெற விஷேட ஏற்பாடு

கொழும்பு, நவ.16

கொழும்பு மாநகரசபைக்கு உட்பட்ட தொடர்மாடிக் குடியிருப்புக்களில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளோரில் தொற்றாநோய் நிலை உள்ளவர்கள் மருந்துப்பொருள்களை வீட்டுக்கு வரவழைத்துப் பெற்றுக்கொள்ள விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

தொடர்மாடிக் குடியிருப்புக்களில் வசிப்போர் விசேடமாகக் கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பில் சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொற்றா நோய் நிலைமைகளைக் கொண்டவர்கள் கொரோனா தொற்றுக்குள்ளாவதிலிருந்து தம்மைப் பாதுகாப்பதற்கு தொடர்ந்து தமது நோய்களுக்கான மருந்துகளை எடுத்துக்கொள்வது அவசியமாகும்.

எனவே, அத்தகைய நீண்டகால அல்லது தொற்றாநோய்களுக்கு மருந்துகளைப் பயன்படுத்துபவர்கள் தமது தொடர்மாடிக்குடியிருப்புக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரிக்கு உரிய விபரங்களை வழங்குவதன் ஊடாக மருந்துப்பொருள்களை வீடுகளுக்கே வரவழைத்துக்கொள்ள முடியும் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

# கொழும்பில் இந்தியர்கள் 66 பேருக்கு கொரோனா!

கொழும்பு, நவ.16

கொழும்பிலுள்ள ஒரு கட்டுமானத் தளத்தில் பணியாற்றும் 66 இந்தியப் பிரஜைகளுக்கு நடத்தப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் அவர்களுக்கு கொரோனா தொற்றிருப்பது கண்டறியப்பட்டுள்ளது என்று சுகா தாரத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார் என்று ஹிந்துஸ்தான் ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இவர்களுக்கு நடத்தப்பட்ட எழுந்தமான பரிசோதனையில் முதல் 19 பேரைத் தொடர்ந்து, பின்னர் 47 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது என்று மருத்துவர் விஜேமுனி கூறினார்.

இவர்கள் அனைவரும் தர்கா நகரிலுள்ள இடைக்காலச் சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ந-இ)

# சுகாதார வழிகாட்டலிலிருந்து மக்கள் தப்பிக்கவே முடியாது!

## நாமல் தெரிவிப்பு

கொழும்பு, நவ.16

சுகாதார அதிகாரிகளின் கொரோனாத் தடுப்பு வழிகாட்டுதல்களைப் பொது மக்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்று அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.


கண்டியில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்பான விஷயங்களில் அரசியல் ஈடுபாடு தேவையற்றது.

எனவே அனைத்துப் பிரிவுகளும் சுகாதார அமைச்சால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும். கொரோனாவால் உயிரிழந்தவர்களின் சடலங்களைத் தகனம் செய்வது தொடர்பான சர்ச்சையை கவனமாகப் பரிசீலித்து தீர்க்க வேண்டும். இதுபோன்ற தீர்வுகள் மற்றும் சுகாதார நிபுணர்களால் நிர்ணயிக்கப்பட்ட சுகாதார வழிகாட்டுதல்களிலிருந்து விலக முடியாது -என்றார். (ந-இ)





## இன்றைய நாள்

**மேடம்:** வீட்டை சீர்செய்யும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். சமூகத்தில் மரியாதை கூடும். சகோதர வகையில் சிறு நன்மை உண்டு.

**இடபம்:** குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். பெரியோருக்கு நன்மை செய்து ஆசி பெறுவீர்கள். எதிலும் ஏற்றம் பெறுவீர்கள். சில சோதனைகள் நேரலாம்.

**மிதுனம்:** வெளிவட்டாரத் தொடர்பு விரும்பும் விதத்தில் அமையும். முன்யோசனையுடன் செயல்படுவீர்கள். எதிர்பார்த்த பணம் வரும். பேச்சில் கவனம் தேவை.

**கடகம்:** மற்றவர்களின் நன்மதிப்பைப் பெறுவீர்கள். நிம்மதி மீளும். சொத்து விஷயத்தில் மனைவி வழியில் பக்கபலமாக இருப்பார்கள். குடும்பத்தில் இருந்த பிரச்னைகள் நீங்கும். நல்ல செய்தி வரும்.

**சிம்மம்:** புதிய சலுகைகள் கிடைக்கும். தம்பதியர்களின் சங்கடங்கள் தீரும். பிள்ளைகள் பற்றிய கவலை நீங்கும். கோபத்தை குறைப்பது நல்லது. நண்பர்களுக்காகச் செலவிடுவீர்கள்.

**கன்னி:** உறவினர் உதவிகரமாக நடந்து கொள்வர். மனதில் நம்பிக்கை வளரும். தொழில், வியாபாரத்தில் இலக்கு நிறை வேறும். தாராள பணவரவில் சுபச்செலவு செய்வீர்கள்.

**துலாம்:** எந்த விஷயத்திலும் மிகவும் கவனமாக இருப்பது அவசியம். மற்றவர்கள் மனம் காயப்படும் படி பேசாதீர்கள். செயல்களில் கவனம் தேவை. குடும்பத்தினருடன் மனம் விட்டு பேசுவீர்கள்.

**விருச்சிகம்:** கடந்த கால வேண்டுதல்களை நிறைவேற்றுவீர்கள். போட்டிகள் குறையும். சக ஊழியர்களால் ஆதாயம் உண்டு. சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள்.

**தனுசு:** பிரபலங்களின் நட்பு கிடைத்தால் அதிக உரிமை எடுக்காதீர்கள். சுய முயற்சியால் வெற்றி பெறும் நாள். இனிய சந்திப்பு நிகழும். மாணவர்கள் எதிர்பார்த்த படிப்பிற்கான சீட் கிடைக்கும்.

**மகரம்:** அனுபவசாலியின் உதவியால் சில யுக்திகள் கற்பீர்கள். புதியவர்களின் நட்பால் ஆதாயம் எதிர்பாக்க முடியாது. பணவரவு திருப்திகரமாக இருப்பதால் சேமிப்பு கூடும்.

**கும்பம்:** குடும்பத்தினருடன் ஏற்பட்ட வாக்குவாதம் சமாதானமாகும். ஓய்வின்றிப் பணியாற்றி நிறைவாய்ப் பணியை முடிப்பீர்கள்.

**மீனம்:** குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடக்கும். வாகனத்தை சீர் செய்வீர்கள். தள்ளிப் போன பணிகள் முடியும். வீட்டில் தடைகள் அகலும். எதிரிகள் விலகுவர். புதியவர்களிடம் கவனமாக இருங்கள்.

யாழ். போதனாவில்

## இருதய சிகிச்சைகள் இன்றுமுதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.16
யாழ். போதனா மருத்துவமனையில் இருதய சிகிச்சைகள் இன்று முதல் விக்ரோரியா வீதியில் அமைந்துள்ள சிகிச்சை நிலையத்தில் நடைபெறவுள்ளது என்றும், மகப்பேற்று பெண் நோயியல் சிகிச்சைப் பிரிவும் மீண்டும் பழைய இடத்திற்கு மாற்றப்பட்டு இன்று முதல் இயங்கவுள்ளது என்றும் யாழ் போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் சி.யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்; யாழ்.போதனா மருத்துவமனையில் நோயாளிகளுக்கான சிகிச்சைகள் எவ்வித தடங்கலுமின்றி செவ்வனே நடைபெறுகின்றன. வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற நோயாளர்கள் வந்தவாறு உள்ளார்கள். தற்போது கொரோனா வைரஸ் காரணமாக சமூக இடைவெளியைப் பேணும் வகையில் கிளினிக்குகள் அமைக்கப்பட்டுள்ளன -என்றார். (ப-20)

கிழக்கு மாகாணத்தில்

# புதிதாக 4 கொரோனா சிகிச்சை நிலையங்கள்

**கொழும்பு,நவ.16**
**கொவிட்– 19 தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கென கிழக்கு மாகாணத்தில் மேலும் நான்கு மருத்துவமனைகள் தயார் செய்யப்பட்டுள்ளன என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஏ.லதாகரன் தெரிவித்தார்.**

பேலியகொட கொத்தணியுடன் தொடர்புடைய கொவிட்-19 தொற்றாளர்கள் கிழக்கு மாகாணத்தில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர்.

நோயாளர்களுக்கு சிறந்த சேவையை வழங்கும் வகையில், புதிதாக நான்கு கொரோனா சிகிச்சை நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே 5 மருத்துவமனைகள் இயங்கி வருகின்றன.

திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி பிரதேச மருத்துவமனை, மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரியகல்லாறு பிரதேச மருத்துவமனை, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழுள்ள மருதமுனை பிரதேச மருத்துவமனை மற்றும் அம்பாறை பிராந்திய சுகாதாரசேவைகள் பணிமனையின் அதிகார எல்லைக்குட்பட்ட தமண பிரதேச மருத்துவமனை ஆகியன புதிதாக கொரோனா சிகிச்சை நிலையங்களாக அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு புதிதாக உருவாக்கப்பட்டுள்ள கொரோனா சிகிச்சை நிலையங்கள் மூலம் 450 கொவிட் தொற்றாளர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் உள்ள கொரோனா சிகிச்சை நிலையங்கள் மூலம் இதுவரை 731 நோயாளர்களுக்கு வெற்றிகரமான சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)

பெரும்பான்மை பலத்துடன்

## வலி. தெற்கு சபையில் நிறைவேறியது பாதீடு

வலி.தெற்கு, நவ.16
வலி தெற்கு பிரதேச சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் வாக்கெடுப்பின்றி பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை, தவிசாளர் தர்ஷன் தலைமையில் இடம்பெற்றது. இக் கூட்டத்துக்கு 30 உறுப்பினர்களில் 26 உறுப்பினர்கள் சபைக்குச் சமூகமளித்திருந்தனர். இதன்போது அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தை தவிசாளர் சபையில் முன்வைத்தார். விவாதம் இடம்பெற்றது. சபையில் இருந்த 26 உறுப்பினர்களில் 20 உறுப்பினர்கள் வரவு செலவுத் திட்டத்தை ஏற்றுக்கொண்டனர். 6 உறுப்பினர்கள் மட்டும் ஆட்சேபனை தெரிவித்தனர். இதனால் வலி தெற்கு பிரதேச சபையின் அடுத்த ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டம் வாக்கெடுப்பின்றி பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேறியது. ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நான்கு உறுப்பினர்கள், மற்றும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் 2 உறுப்பினர்கள் வரவு செலவுத் திட்டத்தை ஆட்சேபித்தனர். (ப-20)

## கொரோனா பரவும் இடங்கள்: அடையாளப்படுத்தல் ஆரம்பம்

கொழும்பு,நவ.16
கொழும்பு மாநகர சபை, அரச புலனாய்வுச் சேவையுடன் இணைந்து கொரோனா பரவும் சாத்தியமான பகுதிகளை அடையாளம் காணும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.




கொழும்பு மாநகர சபையின் தலைமை மருத்துவ அதிகாரி மருத்துவ கலாநிதி ருவான்விஜயமுனி இதனைத் தெரிவித்துள்ளார்.


கொழும்பு நகரப்பகுதிகளில் நட்சத்திர விருந்தகங்கள், முன்னணி பல்பொருள் அங்காடிகள், விற்பனை நிலையங்கள் மற்றும் துறைமுகம் ஆகியவற்றின் பல பணியாளர்கள் தொற்றுடன் கண்டறியப்பட்டனர்.

இதனையடுத்து நகரப் பகுதிகளில் சோதனை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு 2, கொழும்பு 7 மற்றும் கொழும்பு 1 ஆகிய அடுக்குமாடிக் குடியிருப்புகளில் இருந்து கொரோனாத் தொற்றுக்கள் பதிவாகியுள்ளன. அதனையடுத்து தொற்றுப் பகுதிகள் அடையாளப்படுத்தப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

## களுத்துறையில் 803 தொற்றாளர்கள்


கொழும்பு,நவ.16
களுத்துறை மாவட்டத்தில் 803 தொற்றாளர்கள் இதுவரை இனங்காணப்பட்டுள்ளனர் என்று களுத்துறை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் உதய ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.



தொற்றாளர்களிடையே18 பேர் கர்ப்பிணிகள் என்பதுடன், 9 பேர் பல்வேறு நோய்களால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

803 தொற்றாளர்களிடையே 121 பேர் ஹொரணைப் பகுதியில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதற்கமைவாக ஏனைய பகுதிகளை விட ஹொரணையிலேயே அதிகளவு தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

# யாழ்-செம்மணி வீதியைத் திறக்குமாறு வலியுறுத்து



யாழ்ப்பாணம், நவ.16
மழை காலத்தில் மக்களுடைய போக்குவரத்தை இலகுபடுத்தும் நோக்கில், யாழ். வரவேற்று வளைவு அமைக்கப்பட்ட செம்மணி வீதியை உடன் திறக்குமாறு நல்லூர் பிரதேச சபை வலியுறுத்தியுள்ளது.

நல்லூர் பிரதேச சபையின் கடந்த அமர்வின்போதே சபை ஏகமனதாக இவ்வாறு வலியுறுத்தியது. இது தொடர்பான கோரிக்கைக் கடிதம் ஒன்றை நல்லூர் பிரதேச சபைக்கு அனுப்பிவைக்க முடிவு செய்யப்பட்டது.

செம்மணிப் பகுதியில் உள்ள வரவேற்பு வளைவு அமைந்துள்ள வீதியில் வரவேற்பு வளைவு வேலைகள் இன்னும் பூர்த்தியாக்கப்படவில்லை அதனால் போக்குவரத்துக்கு மக்கள் அதிகம் சிரமப்படுகின்றனர். அதன் அருகிலுள்ள மாற்று வீதி மழை வெள்ளம் தேங்கியுள்ளதோடு சேற்றுடன் கூடியதாக மக்கள் பயணம் செய்யக்கூடிய நிலையில் இல்லை. உடனடியாக உரிய வீதியைத் திறக்க வேண்டும் என்று சபையின் அமர்வில் உறுப்பினர் மயூரன், மதுசுதன் ஆகியோர் கோரியதால், பாதையைத் திறக்குமாறு சபை வலியுறுத்தியது. (ப)

## வீதியில் நின்றவாறே கந்த சஷ்டி வழிபாடு

யாழ்ப்பாணம், நவ.16

யாழ். நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நேற்று கந்தசஷ்டி பூசை வழிபாடுகள் இடம்பெற்றன ஆலயத்துக்குள் எவரும் அனுமதிக்கப்படாத நிலையில் பக்தர்கள் வீதியில் நின்று கந்தனைத் தரிசித்தனர்.

நாட்டில் தற்போது உள்ள கொரோனா அச்ச நிலையின் காரணமாக ஆலயங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள சுகாதாரநடைமுறைகளுக்கு ஏற்ப வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் ஆலயத்திலும் பூசை வழிபாடுகள் இடம்பெறுகின்றன (ப-111)



## விஜயபாகு காலாட்படை 10 ஏக்கரில் விவசாயம்

கந்தளாய், நவ.16

கந்தளாய், சேருவாவில பிரதேசத்தில் நீண்ட காலமாகச் செய்கை பண்ணப்படாதிருந்த 10 ஏக்கர் வயல் காணியில் இராணுவத்தின் 22ஆவது விஜயபாகு காலாட்படையால் நெற் செய்கைக்கான விதைநெல் வீசப்பட்டுள்ளது.

குறித்த நிலம் சேருவாவில ரஜா மகா விஹாரைக்குச் சொந்தமானது என்று தெரிவிக்கப்பட்டது.

விகாராதிபதியினால் கொடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமையவும், 22ஆவது விஜயபாகு காலாட்படைப் பிரிவின் பொதுக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சன்ன வீரசூரியவின் பணிப்புரைக்கு அமையவும் குறித்த தரிசு நிலம் நெல் வயலாக மாற்றப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ப-ரி4)

## கணவனை இழந்த பெண்களை மிரட்டுகிறது வாள் வெட்டுக்குழு

### பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை என்று குற்றச்சாட்டு

**முல்லைத்தீவு, நவ. 16**

**முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு தேராவில் பகுதியில் கணவனை இழந்த நிலையில், குடும்பத்தைத் தலைமை தாங்கும் பெண்களை வாள் வெட்டுக்குழு மிரட்டி வருகிறது என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.**

இது தொடர்பில் பொலிஸ் நிலைத்தில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டபோதும், இதுவரை எந்த நடவடிக்கைகளையும் பொலிஸார் முன்னெடுக்கவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்ததாவது;

சனி,ஞாயிறு ஆகிய இரு தினங்களில் வாள்வெட்டுக் குழுவின் அட்டகாசம் தாங்கமுடியாதளவு அதிகரிக்கின்றது. இரவு நேரங்களில் எமது தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்புகொள்ளும் வாள்வெட்டுக் குழுவைச் சேர்ந்தவர்கள், ஆபாசமாகப் பேசுகின்றனர்.

அதற்கு இணங்க மறுக்கும்போது மகளைக் கடத்துவேன் அல்லது மகளுக்கு கை எடுப்பேன் என மிரட்டல் விடுக்கிறனர். இவ்வாறு மிரட்டுபவர்களின் குரல் பதிவுகளை பொலிஸாருக்கு வழங்கியும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவே உரியவர்கள் அவ்வாறனவர்கள் மீது உரிய நடவடிக்கைகளை எடுத்து அவர்களைக் கைதுசெய்ய வேண்டும் என்றனர்.



தேராவில் பகுதியில் வாளுடன் நடமாடிய ஒருவர் நேற்றுப் பிடிக்கப்பட்டு பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார். அந்தப் பகுதி இளைஞர்களால் அவர் பிடிக்கப்பட்டார். இந்தச் சம்பவத்தின்போதே அங்குள்ள மக்கள் மேற்குறித்த குற்றச்சாட்டை முன்வைத்தனர். (ப-19)

## நாடாளுமன்றுக்கு பஸில் வரவேண்டும்

*அனைவரது விருப்பம் என்கிறார் நிமல்*

கொழும்பு, நவ.16

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமல்ல, அனைவரும் பஸில் ராஜபக்ஷ நாடாளுமன்றுக்கு வர வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளனர் என்று இராஜாங்க அமைச்சர் நிமல் லங்சா தெரிவித்துள்ளார்.

வென்னப்புவ பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பஸில் ராஜபக்ஷ நாட்டுக்குத் தேவையான தலைவர் என்பதை நாடாளுமன்றில் உள்ள ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உட்பட அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

அவரிடம் உள்ள அனுபவம், அறிவு, செயற்பாட்டு ரீதியான பங்களிப்பு தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் உள்ள தொடர்புகளைப் பயன்படுத்தி பொருளாதாரம், மக்களின் வாழ்க்கையை முன்னேற்ற முடியும்.

அத்துடன் நாட்டை அபிவிருத்தி செய்ய அவர் நாடாளுமன்றில் இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே, பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அனைவரும் உள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)

*கௌதாரிமுனையில்*

## சதுப்பு நிலத்தைக் காக்க நடப்பட்டன தாவரங்கள்

கிளிநொச்சி, நவ.16

கடல் சார் சதுப்பு நிலக் கரையோரங்களைப் பாதுகாக்கும் நோக்குடன் கடல் சார் சுற்றுச்சூழல் அதிகார சபையின் சதுப்பு நிலத் தாவரங்கள் நடும் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி கௌதாரி முனையில் நேற்று சதுப்பு நிலத் தாவரங்கள் நடப்பட்டன.

நிகழ்வில் கடல் சார் சுற்றுச்சூழல் அதிகார சபையின் தலைவர் கலந்துகொண்டு குறித்த தாவரங்களை நட்டார். அவருடன் கடல்சார் சுற்றுச்சூழல் அதிகார சபையின் வடக்கு கிழக்கு முகாமையாளர், உத்தியோகத்தர்கள், கிராம அலுவலகர் மற்றும் அப் பகுதி மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ப-113)

## தவிசாளர்—செயலர் முறுகல்; அந்தரிக்கும் பணியாளர்கள்

### பூநகரி பிரதேச சபையில் சம்பவம்

பூநகரி, நவ.16

பூநகரி பிரதேச சபையின் தவிசாளருக்கும், செயலாளருக்கும் இடையே நிலவி வருகின்ற குழப்பங்கள் காரணமாக சபையின் பணியாளர்களுக்குரிய கொடுப்பனவுகள் தாமதமாக வழங்கப்படுகின்றன எனவும், இதனால் நெருக்கடிக்குள்ளாகியுள்ளோம் எனவும் பணியாளர்கள் கவலை தெரிவித்தனர்.

செயலாளரின் அதிகாரங்களை தாம் மீளப் பெற்றுக்கொள்கிறேன் என தவிசாளர் செயலாளருக்கு கடிதம் மூலம் அறிவித்து அதன் பிரதிகளை உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோருக்கும் பிரதியிட்டிருந்தார். இதன் பின்னர் பணியாளர்களுக்கான விடுமுறைக்கு அனுமதியளிப்பது, கொடுப்பனவுகளுக்கான காசோலைகளில் ஒப்பம் இடுவது போன்ற செயலாளரின் பணிகளில் குழப்பம் ஏற்பட்டது. தீபாவளியை முன்னிட்டு பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய பண்டிகைக் கால முற்பணக் கொடுப்பனவுக்கு தீபாவளிக்கு முதல் நாளே செயலாளரால் காசோலையில் ஒப்பம் இடப்பட்டது. இதனால் பண்டிக்கைக் கால முற்பணத்தை உரிய தேவைக்குப் பெற முடியாது போய்விட்டது என பணியாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ப-214)

## மரநடுகை



மானிப்பாயில், கிராம வீதி ஓரங்களில் நேற்றுக் காலை மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. பாரதி சனசமூக நிலைய ஏற்பாட்டில் மானிப்பாய் கிழக்கு பிரதேச இளைஞர்கள் சேவை மன்றத்தால் அந்த மரக்கன்றுகள் நடப்பட்டன.

வலி தென்மேற்கு பிரதேச சபை தவிசாளர் அ. ஜெபநேசன், சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர்கள் சேவை அதிகாரி லோ. றஜீவன் ஆகியோர் கலந்துகொண்டு மரநடுகை நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர். வேம்பு, மருது, சித்திரவேம்பு, இலுப்பை ஆகிய 26 மரக்கன்றுகள் இவ்வாறு நடப்பட்டன. (ப)

# இடமாற்றங்களில் பக்கச்சார்பு; விளைவுகளைச் சந்திக்க நேரும்


## வட மாகாண கல்வி அமைச்சுக்கு ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

**யாழ்ப்பாணம், நவ. 16**

**முறைகேடுகள் தீர்க்கப்படவில்லையாயின், வருடாந்த இடமாற்றங்களில் வட மாகாண கல்வியமைச்சு பாரிய விளைவுகளைச் சந்திக்கும் என இலங்கை ஆசிரியர் சங்கம் எச்சரித்துள்ளது.**

இது தொடர்பில் அதன் செயலர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

யாழ்ப்பாண கல்வி வலயத்தில் நிவர்த்திசெய்யப்படாத, பக்கச்சார்பான இடமாற்றங்கள் காரணமாக நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற யாழ். கல்வி வலய இடமாற்றச்சபையில் இலங்கை ஆசிரியர் சங்கம் கலந்து கொள்ளாமல் புறக்கணித்துள்ளது. கடந்த வருட இடமாற்றச் சபையில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்தாமல், ஒரு சில தனிப்பட்டவர்களின் தலையீடு காரணமாகத் தொடர்ந்தும் பக்கச்சார்பாகவே இடமாற்றங்கள் நடைபெற்று வரும் நிலையில், இடமாற்றச் சபை கூடுவது என்னும் போர்வையில் முறைகேடுகளை அனுமதிக்க முடியாது. இதன் அடிப்படையிலேயே, இலங்கை ஆசிரியர் சங்கம் குறித்த இடமாற்றச் சபையைப் புறக்கணித்துள்ளது. ஆயினும், கடந்த வெள்ளிக்கிழமை இலங்கை ஆசிரியர் சங்கம் இன்றி இடமாற்றச்சபை நடைபெற்றிருந்தது. இதன்மூலம் 'முறைகேடுகளைத் தொடர்ச்சியாக ஆதரித்துவருகின்றோம்' என்ற விடயத்தையே குறித்த இடமாற்றச் சபையில் கலந்துகொண்டவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். கடந்த வருட இடமாற்றச் சபையில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின்படி, முறைகேடுகள் நிவர்த்தி செய்யப்படும் வரை, யாழ். கல்வி வலயத்தில் எடுக்கப்படும் இடமாற்றத் தீர்மானங்களுக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் ஒத்துழைப்பு வழங்கப் போவதில்லை. ஒவ்வொருவருக்கு ஒரு நீதி என செயற்படுவதற்கு இலங்கை ஆசிரியர் சங்கம் ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை. குறித்த சில முறைகேடுகள் குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரையைக் கூட மீறும் வகையிலேயே கல்வியமைச்சின் செயலாளரும், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளரும் செயற்பட்டு வருகின்றனர் என்றுள்ளது. (ப-20)



# ஒரே குடும்பத்தில் எழுவருக்கு கொரோனா

கொழும்பு, நவ.16

துறைமுகத்தில் பணியாற்றும் ஒருவருக்கு, கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டதையடுத்து, அவருடைய குடும்பத்தைச் சேர்ந்தோர் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்கள் 7 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொம்பே பிரதேச செயலக்ப் பிரிவைச் சேர்ந்தவர்களே இவ்வாறு தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து இவர்களுடன் தொடர்புகளைக் கொண்டிருந்த 10 குடும்பங்களைத் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (க-இ)

# சிறைகளுடன் தொடர்பு; 437 பேருக்கு கொரோனா

கொழும்பு, நவ. 16

சிறைச்சாலைகளுடன் தொடர்புடைய மேலும் 108 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே 329 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், நேற்று மேலும் 108 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய சிறைச்சாலைகளுடன் தொடர்புடைய கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 437 ஆக அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்கள் அனைவரும் சிகிச்சை நிலையங்களில் சேர்க்கப்பட்டுள்ளனர். (க-இ)



# கருணா என்பவர் ஒரு 'காமெடி பீஸ்'

## வியாழேந்திரன் குதர்க்கம்

மட்டக்களப்பு, நவ.16

கிழக்கு மாகாணத்தில் தன்னைப் பிரபல்யப்படுத்த நினைக்கும் கருணா எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தொடர்பாக சில குற்றச்சாட்டுகள் உள்ளன. இவர் மீதான விசாரணை ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கருணா என்பவரை நான் ஒரு அரசியல்வாதியாகக் கூட கணக்கெடுப்பதில்லை. அவர் ஒரு காமெடி பீஸ். ஒரு இலட்சம் வேலைவாய்ப்பு என்பது நாட்டின் ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனத்தில் சொல்லப்பட்டது. அந்த வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

ஆனால் கருணா அண்மையில் ஒரு கருத்தை வெளியிட்டதை ஊடகங்கள் வாயிலாகப் பார்த்தேன். மட்டக்களப்பில் இருக்கின்ற அமைச்சர் 20 ஆயிரம் ரூபாவை அந்த வேலைவாய்ப்பு விண்ணப்பங்களுக்கு வாங்கி, வேலைவாய்ப்பை கொடுத்ததாகச் சொல்லியிருக்கின்றார். அவரது கருத்தை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. -என்றார். (க-இ)

# பொருளாதாரத்தை மீட்க தேசிய வேலைத்திட்டம்

கொழும்பு, நவ.16

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும் அதேவேளை பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான வழிமுறைகள் தொடர்பிலும் அரசு தீவிர கவனம் செலுத்தி வருகின்றது.

இதன்படி பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்காக நான்கு உப குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் என 32 பேர் அக் குழுக்களில் அங்கம் வகிக்கின்றனர். இதன் ஆரம்ப நடவடிக்கையாக கிராமிய பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது. தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு மக்களை மையமாகக்கொண்ட பொருளாதாரத்தை மேம்படுத்துவதன் அடிப்படையில் அரச பொறிமுறையை கிராமத்தை நோக்கிக் கொண்டு செல்வது இதன் பிரதான நோக்கமாகும். அதற்காகவே உப குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. நாடு முழுவதும் சென்று மக்கள் குறைகளைக் கேட்டறிந்து அது தொடர்பில் இக் குழுக்கள் அறிக்கையிட வேண்டும். தேசிய வேலைத்திட்டத்தை முன்னெடுக்கும் முக்கிய பொறுப்பு நாமல் ராஜபக்சவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பஸில் ராஜபக்சவின் வழிகாட்டலுடன் இதற்கான நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன. (ப)

# சந்தைக்கு அருகில் உள்ள வீதியைச் சீரமையுங்கள்

## மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, நவ.16

கிளிநொச்சி பொதுச் சந்தைக்கு அருகில் உள்ள வீதியைச் சீரமைக்குமாறு, அந்த வீதியைப் பயன்படுத்தும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



கிளிநொச்சி பொதுச் சந்தைக்கு அருகில் உள்ள வீதி சீரமைப்பின்றி குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது. மழைகாலம் ஆரம்பித்துள்ள நிலையில், வீதியில் காணப்படுகின்ற கிடங்குகளில் மழை நீர் தேங்கி நிற்பதால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுகிறது.

சந்தையிலிருந்து மீன் மற்றும் இதர கழிவுகளை காகங்கள், நாய்கள் என்பன எடுத்துச் செல்கின்ற சந்தர்ப்பங்களில் அவை சில குறித்த நீரில் வீழ்ந்து துர்நாற்றம் வீசி சுகாதாரச் சீர்கேடுகளை ஏற்படுத்துகின்றன. எனவே குறித்த வீதி தற்காலிகமாகவேனும் சீர் செய்யப்பட வேண்டும். கிளிநொச்சி நகரின் மத்தியில் பொதுச் சந்தையின் அருகில் செல்கின்ற குறித்த வீதியின் நிலைமையினை இதுவரை எவரும் கண்டுகொள்ளாமை எமக்கு கவலையளிக்கிறது என்றனர். (ப-214)

# போதனாவைத்தியசாலை - யாழ்ப்பாணம்
# வழங்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவுசெய்தல் - 2021

யாழ் போதனா வைத்தியசாலைக்கு கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் பொருட்கள், சேவைகளை வழங்குவதற்கு விருப்பமுடைய வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் என்பனவற்றிடமிருந்து 2021 ம் ஆண்டிற்குப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப் படிவங்களை கீழ்வரும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய தயாரித்து பின்வரும் வழங்கல்கள் / சேவைகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக மீளளிக்கப்படாத வைப்புப்பணம் ரூபா1000.00ஐ எமது அலுவலக காசாளரிடம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை அல்லது பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் என்னும் பெயருக்கு பெறப்பட்ட பிரதான அஞ்சல் அலுவலகம் யாழ்ப்பாணத்தில் காசாக்கக் கூடியகாசுக் கட்டளையை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து தபாலுறையில் இட்டு இடதுபக்க மேல் மூலையில் **"வழங்குனர்கள் பதிவு செய்தல் - 2021"** எனக் குறிக்கப்பட்டு பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு**2020.12.16** ம் திகதிக்குமுன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத்தபால் மூலம் அல்லதுநேரடியாக அலுவலகத்தில் கையளிக்கலாம்.

| உருப்படி இல | பொது பொருட்கள் |
|---|---|
| A – 01 | அலுவலக காகிதாதிகள், எழுதுபொருட்கள், மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள். |
| A – 02 | தளபாடங்களும், அலுவலக உபகரணங்களும் (மரம், உருக்கு, பிளாஸ்ரிக், பைவர் போன்றவை) |
| A – 03 | கணினிகள் கணினியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள், போட்டோ பிரதி இயந்திரம், இலத்திரனியல் பிரதிபண்ணும் இயந்திரங்கள் (Duplo), CCTV கமராக்கள், றோனியோ இயந்திரம், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோனர்கள், றிபன்கள் என்பன. |
| A – 04 | யன்னல் திரைச்சீலைகள், சீருடைகள் மற்றும் துணி வகைகள். |
| A – 05 | குளியலறைப் பொருத்திகள், மாபிள் வகைகள் நீர்க்குழாய்கள், இணைப்புக்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள். |
| A – 06 | சகல விதமான வீட்டுப் பாவனைப் பொருட்கள் (வாளி, ஜக், கேத்தல், பீங்கான் பொருட்கள், கண்ணாடிப் பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள் போன்றவை) |
| A – 07 | தும்புமெத்தை, இறப்பர் மெத்தை, மெக்கின்ரோஸ், எலாஸ்டிக், நைலோன் நூல் மற்றும் பஞ்சினாலான தலையணைகள் போன்றவை. |
| A – 08 | கட்டட, இரும்புப் பொருட்கள், பெயின்ற், வாணிஸ் மற்றும் சகல ஹாட்வெயர் பொருட்கள் மணல், கல், தீராந்தி, சலாகை போன்றவை. |
| A – 09 | மின்சாரப் பொருட்கள், அதன் உதிரிப்பாகங்கள், மின் மோட்டர்கள், மின்பல்புக்கள், மின் விசிறிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பொருட்களும். |
| A – 10 | புற்பாய், தும்புத்தடி, விளக்குமாறு, கால் துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனையவை. |
| A – 11 | எல்லா விதமான காபோலிக் சவர்க்காரம், இயந்திரத்தில் துணி துவைக்கும் தூள் ,பார் சவர்க்காரம் சுத்தப்படுத்துவதற்கான திரவ வகைகள், சவர்க்காரத்தூள், சேவிங் பிளேட் மற்றும் ஏனையவை. |
| A – 12 | டயர், டியூப், பற்றிகள் மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் |
| A – 13 | தோல் உற்பத்திப் பொருட்கள் - சப்பாத்துக்கள், சிலிப்பர்கள், எல்லா விதமான பாதணிகள். |
| A – 14 | குளிர்சாதனப் பெட்டிகள், காற்றுக் குளிராக்கிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள், DVD player மற்றும் அதன் உதிரிப்பாகங்களும். |
| A – 15 | சகலவகையான ரெக்சீன் துணிகள், பொலித்தீன், பைகள், கழிவகற்றும் பொலித்தீன் பைகள் போன்றவை. |
| A – 16 | இறப்பர் முத்திரை வகைகள், பிளாஸ்ரிக் பெயர்ப்பலகை தினமுத்திரைகள் தயாரித்தல். |
| A – 17 | பால்மா வகைகள் மற்றும் ஊட்டச்சத்துப் பானங்கள். |
| A - 18 | LP வாயு மற்றும் வாயு ரெகுலேட்டர், காஸ் பனர், காஸ் குழாய். |
| A - 19 | சத்திரசிகிச்சைக்கு தேவையான தைத்த உடுப்புகள் (வைத்தியர், தாதி, சிரேஷ்ட ஊழியர்கள், நுளம்புவலை, கட்டில் விரிப்பு, தலையணை உறை, GS Towel) |
| A – 20 | அலுவலக அடையாள அட்டை மற்றும் பெயர் பலகை தயாரித்தல். |
| A – 21 | மருந்துகள் இடும் உறை/ Xகதிர் அட்டை இடும் உறை மற்றும் அச்சிடல் வேலைகள் போன்றவை. |

| உருப்படி இல | மருத்துவப் பொருட்கள் |
|---|---|
| B-01 | சத்திரசிகிச்சை, மருத்துவ உபகரணங்கள் போன்றவை. |
| B-02 | ஆய்வுகூட உபகரணங்கள். |
| B-03 | சத்திர சிகிச்சை ,மருத்துவ ஆய்வுகூட நுகர்வுப்பொருட்கள் (biopsy needles, catheter, Distill water, surgical spirit, & other such things etc) |
| B-04 | பதிவு செய்யும் சுருள்கள் [Recording Paper] (ECG, ETT, CTG, EEG recording paper & other such things) |
| B-05 | சத்திரசிகிச்சைப் பாதுகாப்புப் பொருட்கள், இரசாயனப் பொருட்கள், மருந்து வகைகள், சத்திரசிகிச்சைத் துணையுறுப்புகள் / X கதிர் போன்றவை. |

| உருப்படி இல | சேவைகள் |
|---|---|
| C – 01 | உருக்கு மற்றும் மரத்தள பாடங்கள் திருத்தம் செய்தல் போன்றவை. |
| C – 02 | மின் உபகரணங்கள் திருத்தம் செய்தல் ( காற்றுக் குளிராக்கி, குளிர்சாதனப்பெட்டி, தொலைகாட்சிப் பெட்டிகள் அதனோடிணைந்த உபகரணங்கள்) |
| C – 03 | மின் மோட்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின்விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதலும், மீளமுறுக்குதலும் (Rewinding) |
| C – 04 | அலுவலக உபகரணங்கள் திருத்துதல் (கணனி, Duplo இயந்திரம், புகைப்படபிரதி இயந்திரம்,Fax இயந்திரம்) |
| C – 05 | பத்திரிகை விளம்பரம் பிரசுரித்தல். |
| C – 06 | சலவைசேவைகள். |
| C – 07 | காற்றுக்குளிராக்கி பராமரித்தல் - Air Conditioner Maintenance |
| C – 08 | உள்ளக தொலைபேசி மற்றும் உள்ளக வலையமைப்பு பராமரித்தல் - Intercom Maintenance |
| C – 09 | வாயுஅடுப்பு, வாயு மற்றும் ஒட்சிசன் உபகரணங்கள் திருத்துதல் |
| C – 10 | வீட்டுஉபயோகப் பொருட்கள் திருத்துதல், பொலிசிங் செய்தல், கதிரைபின்னுதல் |
| C – 11 | வைத்தியசாலை உபகரணங்கள், சத்திரசிகிச்சை உபகரணங்கள் திருத்துதல் |
| C - 12 | தையல் வேலைகள். |

| உருப்படி இல | வாகனத்திருத்தமும் சேவிஸ் செய்தலும் |
|---|---|
| D – 01 | சகலவிதமான வாகனங்கள் திருத்துதல், வாகனமின்சார, குளிரூட்டி திருத்தவேலைகள், சீற், குசன் வேலைகள் போன்றவை. |
| D – 02 | சகலவிதமான வாகனமும் சுத்திகரிப்புச் செய்தல். |

| உருப்படி இல | வேலைகள் |
|---|---|
| E – 01 | கட்டிட நிர்மாணம், கட்டிட புனரமைப்பு, கட்டிடத் திருத்தங்கள் போன்றவை (கட்டுமானப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) பதிவு செய்யப்பட்ட செல்லுபடியாகும் காலத்திற்குரிய பிரதி இணைக்கப்படல் வேண்டும்) |
| E – 02 | அலுமினிய நிர்மான வேலைகள். |
| E – 03 | தொலைபேசி இணைப்பு மற்றும் உள்ளக வலையமைப்பு போன்றவை. |

| உருப்படி இல | அகற்றப்படும் பொருட்களை விற்பனை செய்தல் |
|---|---|
| F – 01 | (கண்ணாடி, பிளாஸ்டிக் போத்தல், அலுமினியப் பாத்திரம், X-கதிர் அட்டை, X -கதிர் கழுவும் திரவம், சிரட்டை, டயர், டியூப், சமையல் அறையில் அகற்றப்படும் சகலவிதமான பொருட்கள் அட்டை, கடதாசி மற்றும் கடதாசிப் பெட்டிகள் போன்றவை) |

| உருப்படி இல | உணவுப் பொதிகள் மற்றும் குளிர்பான வகைகள் |
|---|---|
| G – 01 | (சிற்றுண்டி வகைகள், உணவுப் பொதிகள் மற்றும் குளிர்பானங்கள் போன்றவை) |

**நிபந்தனைகள்:**

01. வழங்கல்கள், சேவைகள் 2021 ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
02. திருப்திகரமற்ற வழங்கல்கள், சேவைகளை நிராகரிக்கவும் வெளி மூலங்களிலிருந்தும் கேள்விகோரும் உரிமையும் பணிப்பாளருக்கு உண்டு.
03. பதிவுக்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமை பணிப்பாளருக்கு உண்டு.
04. பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக ஆகக் குறைந்தது ஒருமாத கால கடன் அடிப்படையில் வழங்குவதற்கு இணங்குதல் வேண்டும்.
05. குறித்த தரத்திற்கு மற்றும் மாதிரிக்கு அமைய பொருட்கள் மற்றும் சேவைகளை தேவையான அளவுக்கு குறித்த திகதியில் வழங்குதல் வேண்டும்.
06. அனைத்து வழங்கல்களையும் வைத்தியசாலைக்கு கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும்.
07. வழங்குநர்களைப் பதிவு செய்யும் போது வியாபாரப் பெயர் பதிவு சட்டவாக்கத்தின் கீழ் பதிவுசெய்துள்ள வழங்கலுக்கு எதிர்பார்க்கின்ற அனைத்துப் பொருள் வியாபர நிலையங்களில் இருந்தும் சந்தைப் படுத்தப்படுகின்ற மற்றும் தேவையான அனைத்து தகைமைகளையும் பூரணப் படுத்தியுள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரம் வழங்குநராக பதிவு செய்யப்படும்.
08. மேலதிக விபரங்கள் பெறவிரும்பின் கணக்காளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் தொலைபேசி இலக்கம் 021 222 3149 உடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம்.
09. உருப்படி இலக்கம் B[அறுவை சிகிச்சை மற்றும் மருத்துவ பொருட்கள]க்கு நீங்கள் பதிவுசெய்யும் போது பின்வரும் தகவல்களையும் விண்ணப்பத்துடன் இணைக்கவேண்டும்.

தயாரிப்பு எல்லை[Product range]

உற்பத்தியாளர் அங்கீகாரக்கடிதம் [Copy of manufacturer authorization letter]

CDDA நகல்

நிறுவுதல் அடிப்படை -[Installation Base] (இது தொடர்பான மேலதிக தகவல்கள் இருப்பின் அவற்றை சமர்ப்பிக்கமுடியும்)

பணிப்பாளர்,
போதனாவைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

***மாதிரிவிண்ணப்படிவம்***

| | |
|---|---|
| காசுபற்றுச்சீட்டு/ காசுக்கட்டளைஇல: | |
| திகதி: | |
| தொகை | |

**வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவுசெய்தல் - 2021**
**போதனாவைத்தியசாலை,யாழ்ப்பாணம்.**

1. நிறுவனத்தின் பெயர் :
2. நிறுவனத்தின் முகவரி :
3. தொலைபேசி இல. :
4. தொலைநகல் இல. :
5. மின்னஞ்சல் முகவரி :
6. வியாபாரப் பதிவுபெயர் :
   (வியாபாரப் பதிவுச்சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)
7. VAT: பதிவு இலக்கம் :
8. கடன் வசதிபற்றியவிபரம் (காலஎல்லை/தொகை):


| உருப்படி இலக்கம் | வழங்கல்/சேவைவிபரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

என்னால் தெரிவிக்கப்பட்ட விபரங்கள் சரியானது எனவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரினால் குறிக்கப்பட்ட நிபந்தனை களுக்கு அமைவாக பொருட்கள்/சேவைகள் வழங்குவதற்கு உறுதியளிப்ப துடன் ரூபா……………க்குரிய பற்றுச்சீட்டு/ காசுக்கட்டளை இத்துடன் இணைத்துள்ளேன்.

……………………… ………………………
விண்ணப்பதாரியின் பெயர் விண்ணப்பதாரியின் ஒப்பமும் நிறுவன இறப்பர் முத்திரையும்

……………
திகதி

## பதின்மூன்றாம் ஆண்டு நினைவு மலர்



### அமரர் பரமநாதன் ஜெயக்குமார்
### (ஜெயா)

அன்னையின் மடியில் 20.07.1982 — ஆண்டவன் மடியில் 11.11.2007

திதி: துதியை (16.11.2020)

எங்கள் அன்பின் ஜெயாவே!
எங்கள் ஆருயிர் தெய்வமே ஜெயா கந்தஷட்டி திருநாளில் கந்தனருள் வேண்டி நிற்க கயவர்களின் அம்புபட்டு கந்தன் உனை அழைத்தானே கந்தனின் திருநாள் வரும்போ தெல்லாம் ஜெயா! உனக்கும் நினைவு நாள் வருகிறதே ஜெயா! பதின்மூன்று ஆண்டுகள் பறந்தாலும் உன் முகம் எம் முன்னே உள்ளதடா ஜெயா உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

தாவளை,
இயற்றாலை,
கொடிகாமம்.

உன் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.

## ஆதனப் பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 05 - மத்தியூஸ் வீதி வரிமதிப்பீட்டு இலக்கம் 41/10 என்னும் ஆதன இலக்கத்தை கொண்ட ஆதனம் அரசமுத்து பெண் றெபேக்கா எனும் பெயரில் வரிமதிப்பீட்டு பதிவேட்டில் காணப் படுகிறது.

இதன் பின்னகத்தான ஆதன அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனம் தொடர்பில் பிரசித்த நொத்தாரிசு C.C.S.பற்றிக் முகதாவில் 22.06.1984ம் திகதி 1608ம் இலக்கத்தில் ஓர் அறுதி உறுதி நிறைவேற்றப்பட்டு ஆயர் இல்லம் யாழ்ப்பாணத்தை சேர்ந்த பஸ்ரியாம்பிள்ளை தியோகுப்பிள்ளை என்பவர் பிரான்ஸிஸ் யோசேப் என்பவருக்கு அறுதியாக விற்றுள்ளார்.

எனினும் குறித்த 1608ம் இலக்க உறுதியில் தாயுறுதி விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை .

குறித்த 1608ம் இலக்க உறுதியின் அடிப்படையில் பிரசித்த நொத்தாரிசு க.சிவலிங்கம் முகதாவில் 21.10.1984 திகதியில் 5177ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதியில் இல 41/10, மத்தியூஸ் ஒழுங்கை யாழ்ப்பாணத்தை சேர்ந்த பிரான்சிஸ் யோசேப்பும் பெண் றீற்றாவும் இல 372, பாங்ஷால் வீதி, சின்னவன் நவரத்தினமும் பெண் புஸ்பலீலாவுக்கு அறுதியாக விற்று ஆட்சியை ஒப்படைத்துள்ளனர்

பின்னர் குறித்த 5177ம் இலக்க உறுதியின் அடிப்படையில் பிரசித்த நொத்தாரிசு க.சிவலிங்கம் முகதாவில் 15.02.1987ம் திகதியில் 6590ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதியில் இல 372, பங்ஷால் வீதி, சின்னவன் நவரத்தினமும் பெண் புஷ்பலீலா இல 6/1 மத்தியூஸ் வீதி, யோகு அன்று பிறிடெறிக் ஜெயராஜாவும் பெண் ஜோய்ஸ் ஜெயராஜாவுக்கும் அறுதியாக விற்று உறுதி முடிக்கப்பட்டுள்ளது.

பின்னர் குறித்த 6590ம் இலக்க உறுதியின் அடிப்படையில் பிரசித்த நொத்தாரிசு V.T.சிவலிங்கம் முகதாவில் 23.09.2005ம் திகதியில் 607ம் இலக்கத்தில் நிறைவேறிய சீதன உறுதியில் மத்தியூஸ் வீதி இலக்கம் 6/1ஐச் சேர்ந்த யோகு அன்ட்றூ பிறட்றிக் ஜெயராசாவும் பெண் ஜொய்சி ஜெயராசாவும் ஆகியோர் யோசேப் தர்மநாயகம் இராஜேந்திரன் பெண் பெலிசியாவுக்கு சீதனமாக வழங்கி உறுதி முடிக்கப்பட்டுள்ளது.

குறித்த 607ம் இலக்க உறுதியின் அடிப்படையில் பிரசித்த நொத்தாரிசு சிவலிங்கம் இளங்கீரன் முகதாவில் 27.02.2017ம் திகதியில் 6925ம் இலக்க அறுதி உறுதியில் இலக்கம் 6/1, ஐச் சேர்ந்த யோகு அன்று பிறட்றிக் ஜெயராசாவும் பெண் ஜொய்சியும் ஆகியோர் மற்றும் அதேயிடத்திலிருந்து தற்காலம் கனடாவில் வசித்து வரும் யோசேப் தர்மநாயகம் இராஜேந்திரனும் பெண் பெலிசியாவும் யாழ்ப்பாணம் மத்தியூஸ் வீதி இல 15/19, ஐச் சேர்ந்த ஜோசப் சில்வெஸ்ரர் ஞானதாசும் பெண் தர்மினி யசிந்தாவும் ஆகியோருக்கு அறுதியாக விற்பனை செய்துள்ளனர்.


ஆதனடாப்பு:- வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப் பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று, சுண்டிக்குளி இறை "குளத்துவயலும் மறுபிரிவுகளும்" நில.பர.1குளி 0.62 இதனை 2016.12.18ம் திகதிகளில் அளவையாளர் மெல்வின் ஞானப்பிரகாசம் அவர்கள் அளந்து வரைந்த 2716ம் படத்தில் துண்டு 1 எனும் பாகம் விஸ்தீரணம் நில.பர.(1) ஒன்றும் குளி (00.70) சைபர் சைபர் தசம் ஏழு சைபரும் கிணறும் மற்றுமதற்குச் சேர்ந்தவைகளும் இதன் எல்லை :

கிழக்கு:-வாய்க்காலுடன் சேர்ந்த றோட்டு.
வடக்கு :- மாணிக்கம் கணேசின் ஆதனம்.
மேற்கு:- எம்.தம்பிப்பிள்ளை யோசப்பின் ஆதனம்.
தெற்கு:- தம்பிப்பிள்ளை பாலதாசின் ஆதனம் இதடங்கலும்.

தற்போது ஜோசப் சில்வேஸ்ரர் ஞானதாஸ்சும் பெண் தர்மினி யசிந்தாவும் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு / இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது ஜோ. ஞானதாஸ் பெண் தர்மினி யசிந்தா எனும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

இம்மனுவல் ஆனோல்ட்
முதல்வர்
மாநகரசபை

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



உதிப்பு 24 . 12 . 1973 — உதிர்வு 17 . 10 . 2020

### அமரர் செல்வரட்ணம் ஜெயசீலன்

(ஆசிரியர்-அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயம்)

கடந்த 17.10.2020 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (16.11.2020) முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த் தனையில் கலந்து கொள்வதுடன் அதன்பின்னர் நடைபெறும் மதியபோசனத்திலும் பங்கு பற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சிற்றம்பலம் வீதி,
மீசாலை கிழக்கு,
மீசாலை.

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



தோற்றம் 15 . 01 . 1943 — மறைவு 15 . 11 . 2020

### சதானந்தன் நாகேஸ்வரி

சுன்னாகம் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சதானந்தன் நாகேஸ்வரி நேற்று (15.11.2020) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சதானந்தனின் பாசமிகு மனைவியும். புஸ்பராஜின் அன்புத் தாயாரும். காலஞ்சென்றவர்களான வைத்தியநாதன் தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும். காலஞ்சென்ற வர்களான நடராஜா சிவபாக்கியம் தம்பதியரின் பாசமிகு மருமகளும். பகவதியின் பாசமிகு மாமியாரும். அக்ஷயா, அக்ஷரன் ஆகியோரின் பாச மிகு பாட்டியும். காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம். நடராஜா. கனகரத் தினம். குலமணி. சுப்பிரமணியம். புவனேஸ்வரி மற்றும் அன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும். காலஞ்சென்றவர்களான ஈஸ்வரானந் தன். விபுலானந்தன். யோகானந்தன். ராஜானந்தன். இரத்னானந்தன் மற்றும் ஆனந்தசகுந்தலாதேவி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.11.2020) செவ்வாய்க்கிழமை மு.ப. 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக் கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புஸ்பராஜா - மகன் -0033673594332,
077 841 7075

தகவல்:
குடும்பத்தினர்.

முதலாம் பக்கத் தொடர்ச்சி...

### அரியாலையில்...

தங்கியிருந்த ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதையடுத்து அவருடன் தொடர்பைப் பேணியவர்கள் என்று கருதப்படும் 15 குடும்பங்களைச் சேர்ந்த 61 பேர் யாழ்ப்பாணம், அரியாலையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த நபர் ஒரு வருடத்துக்கு முன்னர் லண்டனில் இருந்து யாழ்ப்பாணம் வந்துள்ளார். அவர் கொழும்பில் தங்கிருந்து விட்டு, இரண்டு மாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம், அரியாலை வந்துள்ளார். அதன்பின்னர் கடந்த மாதம் ஒரு தடவை கொழும்பு சென்று வந்தார் என்று கூறப்படுகின்றது.

இவர் கடந்த 9ஆம் திகதி கொழும்பு சென்றுள்ளார். மீண்டும் லண்டனுக்குச் செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவே அவர் அங்கு சென்றார் என்று கூறப்படுகின்றது.

கொழும்பில் அவருக்கு கடந்த 11ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் அவருக்குக் கொரோனா தொற்றுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அரியாலையில் உள்ள அவரது வீட்டில் அவர் மட்டுமே இருந்துள்ளார். இவர் தனது பயணங்களை முச்சக்கர வண்டி மூலமாகவே மேற்கொண்டிருந்தார் என்றும், உணவை வெளிநபர்களிடம் பெற்றிருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. அதேவேளை, அவருக்கு யாழ்ப்பாணத்தில் வேறுசில வீடுகள் உள்ள நிலையில், அவை வாடகைக்கு விடப்பட்டுள்ளன. அவற்றுக்கும் சென்று வந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. தொற்றாளருடன் தொடர்பைப் பேணியவர்கள் என்ற சந்தேகத்தில் 15 குடும்பங்களைச் சேர்ந்த 61 பேர் சுகாதாரப் பிரிவினரால் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர் தங்கியிருந்த பகுதியில் எழுமாற்றாகப் பி.சி.ஆர் பரிசோதனைகளை நடத்தவும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-எ-26)

### மகாஜன மாணவி...

நேற்று நள்ளிரவு வெளியான தகவல்களின் அடிப்படையில் வவுனியா மாவட்டத்தில் வவுனியா இறமைக்குளம் மகளிர் கல்லூரி மாணவி அஸ்வினியா ஜெயந்தன் 196 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்திருந்தார். அத்துடன் யாழ்ப்பா ணம் இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் சந்திரகுமார் ஆர்வலன் மற்றும் கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் மகிசன் இருவரும் தலா 195 புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

அத்துடன் மகாஜனக் கல்லூரியில் இருந்து 36 பேர் வெட்டுப்புள்ளியைத் தாண்டி சித்திபெற்றிருந்தனர். வயாவிளான் சிறிவேலுப்பிள்ளை வித்தியாலயத்தில் இருந்து தோற்றிய 12 மாணவர்கள் சித்தியடைந்தனர். வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயத்தைச் சேர்ந்த 10 மாணவர்களும் சித்திபெற்றுள்ளனர். இவர்களில் குகதாசன் விதுசாந் என்ற மாணவன் 194 புள்ளிகளைப் பெற்றுள்ளார். (அ. ம-இ)

## சுழிபுரம் இரட்டைக் கொலை: சந்தேகநபர்களுக்கு மறியல்

யாழ்ப்பாணம், நவ. 16

யாழ்ப்பாணம் சுழிபுரம் பகுதியில் கடந்த 13ஆம் திகதி இடம்பெற்ற இரட்டைக் கொலையுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட 12 பேரையும் எதிர்வரும் 27ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

சந்தேக நபர்களில் பெண்ணொருவரும் அடங்குகின்றார். குறித்த 12 பேரிடமும் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. மேலும் 10 பேர் வரையில் தேடப்படுகின்றனர். சந்தேநபர்களைக் கைது செய்வதற்காக யாழ்ப்பாணம், மானிப்பாய், தெல்லிப்பளை, ஊர்காவற்றுறை ஆகிய பொலிஸ் பிரிவுகளில் சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு விசாரணைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

குடும்பங்களுக்கு இடையே நீண்ட கால நீடித்த பகை நேற்று வாள்வெட்டு மோதலாக மாறி இரட்டைக் கொலையில் முடிந்தது என்று முதல்கட்ட விசாரணைகளில் தெரியவந்தது. அதே இடத்தைச் சேர்ந்த சின்னவன் செல்வம் (வயது56) மற்றும் இராசன் தேவராசா (வயது31) என்பவர்களே உயிரிழந்தனர். (ம)

## நிஷாந்தவின் பயணத்தை அறிந்திருந்த அதிகாரிகள்!

கொழும்பு, நவ.16

குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த சில்வா வெளிநாடு செல்லவிருந்ததை இரண்டு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் அறிந்திருந்தனர் எனத் தெரியவந்துள்ளது. அவர் தனது மோட்டார் சைக்கிள் மற்றும் கைத்துப்பாக்கி என்பவற்றை முன் கூட்டியே திணைக்களத்தில் ஒப்படைத்ததை திணைக்கள அதிகாரிகள் ஏற்கனவே அறிந்துள்ளனர் என அரச தகவல்கள் தெரிவித்துள்ளன. (ந-இ)


## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## தனியார் பாதுகாப்பு சேவை பெற்றுக்கொள்ளல் தொடர்பான கேள்வி கோரல் - 2021

1. வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத்தலைவரால் இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தகுதி வாய்ந்த விலைக் கேள்விதாரர்களிடமிருந்து கீழ்க் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட இடங்களிற்கு பாதுகாப்பு சேவையினை பெற்றுக் கொள்ளல் தொடர்பாக அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.
   **கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி : 2020.11.16 - 2020.11.30 நண்பகல் 12.00 மணிவரை**
   **கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 2020.11.30 பி.ப 14.00 மணி வரை**
   **கேள்வி திறக்கும் திகதி : 2020.11.30 பி.ப 14.30 மணி**
2. கேள்வி கோரல்கள் யாவும் தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும்.
3. விலைக் கேள்விதாரர் வலிதான வியாபார பதிவினை கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் கறுப்புப் பட்டியலில் இடம்பெறாமல் இருக்கவேண்டும்.
4. கேள்விதாரரின் பதிவுக்காரியாலயம் அல்லது கிளை அலுவலகம் வடமாகாணத்தில் அமையப் பெற்றிருத்தல் வேண்டும்.
5. தகுதிவாய்நத விலைக் கேள்விதாரர் விலைக் கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பக் கடிதத்தினை சமர்ப்பித்து அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகம், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூரில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணி வரை மீளளிக்கமுடியாத கேள்வி படிவக்கட்டணமாக **ரூபா 2,000.00** இனையும், மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப்பணமாக **ரூபா 25,000.00** இனையும் பணமாகச் செலுத்துவதன் பேரில் பெற்றுக் கொள்ளலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை இரு பிரதிகளில் தயாரித்து **தவிசாளர், வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர்** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரும், மூலப்படிவம் கொண்ட தபாலுறையில் **மூலப்பிரதி** எனவும் இணைப்படிவத்தில் **இணைப்பிரதி** எனவும் எழுதப்பட்டு இணைப்பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கும் பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். (பதிவுத்தபால் முடிவுத்திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறவேண்டும்) அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். பிந்திய விலைக் கேள்வி விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
7. கேள்வி திறக்கப்படும் போது கேள்வியாளரோ அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியோ சமூகமளிக்க முடியும்.
8. கேள்வி கோரல் விண்ணப்பங்கள் யாவும் கேள்வி கோரல் மூடியதனைத் தொடர்ந்து கேள்விதாரர்கள்/ கேள்விதாரர்களினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்
9. இக்கேள்வி அறிவித்தல் தொடர்பாக **வலிகாமம் கிழக்கு பிரதேசசபை** பெறுகைக்குழுவால் எடுக்கப்படும் முடிவு இறுதியானதாகும்.
10. மேலதிக விபரங்களை அலுவலக கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | பாதுகாப்புச் சேவை தேவைப்படும் இடம் | தேவைப்படும் ஆளணி எண்ணிக்கை | | சேவை தேவைப்படும் காலம் |
|---|---|---|---|---|
| | | இரவு | பகல் | |
| 1 | வலிகாமம் கிழக்கு பிரதேசசபை தலைமை அலுவலகம், புத்தூர் | 01 | 01 | 2021.01.01-2021.12.31 |
| 2 | திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவ நிலையம், கைதடி நீர்வேலி இணைப்பு வீதி, நீர்வேலி | 01 | 01 | 2021.01.01-2021.12.31 |
| 3 | அக்கரை கடற்கரை சுற்றுலா வளாகம் | 01 | 01 | 2021.01.01-2021.12.31 |
| 4 | அச்சுவேலி கொள்களம், அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி | 01 | 01 | 2021.01.01-2021.12.31 |
| | மொத்தம் | 04 | 04 | |

தலைவர்
உள்ளூராட்சி பெறுகைக்குழு
வலிகாமம் கிழக்கு பிரதேசசபை
புத்தூர்
2020.11.16



**மாபிள் வேலை**
உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
1 சதுர அடி- 45 ரூபாய்
077 334 1281



**வேலைவாய்ப்பு**
கொழும்பு-யாழ் சொகுசு பஸ் ஆசனப்பதிவாளர் தேவை (ஆண்). வயது 25-45 வரை. உணவு, தங்குமிடம் செய்துதரப்படும்.
**குறிப்பு:-** கொழும்பில் தங்கி இருத்தல் வேண்டும்.
தொடர்பு: **077 1300 190**



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 06 . 04 . 1942



விண்ணில் 28 . 11 . 2019

**அமரர் திருமதி நகுலாம்பிகை ஜெகதீசன்**

திதி: 16.11.2020 (துதியை)
கார்த்திகை மாதம் பிறந்தவுடன்
உங்கள் நிறைவு எம்மை வாட்டுது - அம்மா
இன்றுடன் ஓராண்டு முடிந்தாலும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டு மறையாது அம்மா
உங்கள் ஆத்மா சாந்தியடைய
மருதடியான் பாதம் வேண்டுகிறோம்.

ஆஸ்பத்திரி வீதி
மானிப்பாய்
குடும்பத்தினர்

## நிலைமை...

இலங்கையில் கொரோனா வைரஸின் மூன்றாவது அலையில் சிக்கி கடந்த 24 நாட்களில் 45 பேர் உயிரிழந்துள்ளனர். அதேவேளை, இந்த அலைக்குள் 13 ஆயிரத்து 700 க்கும் மேற்பட்ட தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இது கொரோனா வைரஸின் பதற்ற நிலைமையின் உச்சக்கட்டத்தை எடுத்துக்காட்டுகின்றதல்லவா என்று இராணுவத் தளபதியிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

'கொரோனா வைரஸின் மூன்றாவது அலையின் தாக்கம் வீரியம் கூடியது என்று நாம் ஏற்கனவே அறிவித்துவிட்டோம். அதன்பின்னர் விஞ்ஞானிகளும் அறிவித்திருந்தார்கள். அதனால்தான் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் கொரோனா இறப்புகளின் எண்ணிக்கையும் நாள்தோறும் அதிகரித்துச் செல்கின்றது.

உலக நாடுகளுடன் ஒப்பிடும்போது எமது நாட்டின் நிலைமையைப் பதற்ற நிலைமைக்குக் கொண்டு செல்லாதவாறு கொரோனாவின் முதலாவது மற்றும் இரண்டாவது அலைகளில் நாம் கட்டுப்படுத்தியிருந்தோம். ஆனால், மூன்றாவது அலையின் தாக்கம் வீரியமாக இருப்பதால் அதனை எம்மால் உடனே கட்டுப்படுத்த முடியவில்லை.

இந்தநிலையில், இலங்கையின் தற்போதைய நிலைமை பதற்றம்தான். ஆனாலும், நாம் அஞ்சமாட்டோம். கொரோனா வைரஸின் மூன்றாவது அலைக்கும் விரைவில் முற்றுப்புள்ளி வைத்தே தீருவோம்.

சிலர் கூறுவது போன்று கொரோனாத் தொற்றாளர்கள் தொடர்பான தகவல்களை நாம் மூடிமறைக்கவில்லை. பி.சி.ஆர். பரிசோதனைகளை எதிர் வரும் நாட்களில் விஸ்தரிப்போம். முடிவுகள் கிடைத்த கையோடு ஊடகங்கள் வாயிலாக அவற்றை வெளிப்படுத்தி வருகின்றோம். இதில் எவரும் சந்தேகப்படத் தேவையில்லை' என்றார். (ம-22)

## நேற்று மட்டும்...

கொழும்பு, நவ. 16

இலங்கையில் நேற்று மட்டும் 704 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பேலியகொட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்பில் இருந்தவர்களுக்கே கொரோனா தொற்றியுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. அதற் கமைய நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 17 ஆயிரத்து 287ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாவால் இதுவரையில் 58 பேர் உயிரிழந்துள்ளனர். 11 ஆயிரத்து 495 பேர் குணமடைந்துள்ளனர். அதேவேளை, இலங்கையில் கொரோனாவின் 3ஆவது அலைமூலம் (மினுவாங்கொட, பேலியகொட கொத்தணிகள்) இதுவரை 13 ஆயிரத்து 788 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது. (ம-22)

## கொரோனாவால்...

இலங்கையில் ஏற்கனவே 53 கொரோனா சாவுகள் பதிவான நிலையில், நேற்று அறிவிக்கப்பட்டுள்ள 5 இறப்புகளுடன் இதுவரை 58 கொரோனா சாவுகள் பதிவாகியுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமையும் 5 கொரோனா சாவுகள் பதிவாகியிருந்தன. ஆனால், நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கொரோனா தொடர்பான உயிரிழப்புகள் எதுவும் பதிவாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்றைய இறப்புக்களின் விபரம் வருமாறு:

கொழும்பு 13, ஜிந்துப்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த, 54 வயதான ஆண் ஒருவர், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நேற்று உயிரிழந்துள்ளார். அவரது சாவுக்குக் காரணம், நீண்டகால புற்றுநோய் மற்றும் கொரோனாத் தொற்று உக்கிரமடைந்தமை என அறிவிக்கப்பட்டுள்ளது. இவர் 54ஆவதாக இறந்தவராவார்.

கொழும்பு 15, மட்டக்குளி பிரதேசத் தைச் சேர்ந்த, 39 வயதான ஆண் ஒருவர், கொரோனாத் தொற்று அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து, ஹோமாகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று இறந்துள்ளார். அவரது சாவுக்குக் காரணம், புற்றுநோய் மற்றும் கொரோனாத் தொற்றால் ஏற்பட்ட நியூமோனியா நிலை என அறிவிக்கப்பட்டுள்ளது. இவர் 55ஆவதாக இறந்தவராவார்.

கொழும்பு 12, வாழைத்தோட்டம் பிரதேசத்தைச் சேர்ந்த, 88 வயதான ஆண் ஒருவர், நெஞ்சு வலி காரணமாக, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார். அவரது சாவுக்குக் காரணம், கொரோனாத் தொற்றால் ஏற்பட்ட மாரடைப்பு என அறிவிக்கப்பட்டுள்ளது. இவர் 56ஆவதாக இறந்தவராவார்.

கொழும்பு - 8, பொரளைப் பிரதே சத்தைச் சேர்ந்த, 79 வயதான ஆண் ஒருவர், நேற்று அவரது வீட்டில் உயிரிழந்துள்ளார். அவரது சாவுக்குக் காரணம், கொரோனாத் தொற்றால் நாட்பட்ட நுரையீரல் நோய் உக்கிரமடைந்தது என அறிவிக்கப்பட்டுள்ளது. இவர் 57ஆவதாக இறந்தவராவார். கொழும்பு 13, கொட்டாஞ்சேனையை பிரதே சத்தைச் சேர்ந்த, 88 வயதான ஆண் ஒருவர், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நேற்று உயிரிழந்துள்ளார். அவரது சாவுக்குக் காரணம், கொரோனாத் தொற்று மற்றும் மாரடைப்பு என அறிவிக்கப்பட்டுள்ளது. இவர் 58ஆவதாக இறந்தவராவார். இலங்கையில் கொரோனா வைரஸின் மூன்றாவது அலையில் மாத்திரம் 45 பேர் உயிரிழந்துள்ளனர். கடந்த 24 நாட்களில் இந்தச் சாவுகள் பதிவாகியுள்ளன. (ம-22)

## தம்பகாமம்....

செய்யப்பட்டுள்ளார். பச்சிலைப்பள்ளி பிரதே சத்துக்குட்பட்ட தம்பகாமம் ஊடாக மாமுனை செல்லும் வீதியில் வைத்து இனந்தெரியாத நபர்களால் இவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். செம்பியன்பற்று வடக்கு, மாமமுனையைச் சேர்ந்த தனபாலசிங்கம் குலசிங்கம் (வயது 42) என்பவரே உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் பளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-22,26,214,6,ரி2,40,160)

## சிறைக் கொத்தணி...

செய்யப்பட்டுள்ளது எனச் சிறைச்சாலைகள் ஆணையாளர் துஷார உபுல்தெனிய நேற்று மாலை தெரிவித்தார்.

இதனால் நாடு முழுவதிலுள்ள சிறைச்சாலைகளில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 437ஆக உயர்வடைந்துள்ளது எனவும் அவர் மேலும் கூறினார்.

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலை, வெலிக்கடை சிறைச்சாலை, கண்டி போஹம்பறை சிறைச்சாலை, காலி பூஸா சிறைச்சாலை, மாத்தறை சிறைச்சாலை மற்றும் இரத்தினபுரி குருவிட்ட சிறைச்சாலை ஆகியவற்றில் இருந்தே கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-22)

## துயிலும் இல்ல...

யாழ்ப்பாணம், கோப்பாய் துயிலும் இல்லத்தில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ள நிலையில், துயிலும் இல்லத்துக்கு முன்பாக உள்ள இடத்திலேயே கடந்த ஆண்டுகளில் மாவீரர் நினைவேந்தல் நடத்தப்பட்டு வந்தது. அந்த இடத்தைத் துப்புரவுசெய்ய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நேற்று நடவடிக்கை எடுத்திருந்தது.

அங்கு வந்த பொலிஸார் துப்புரவுப் பணிகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்டனர். துப்புரவாக்கல் பணியில் ஈடுபட்டவர்களின் விவரங்களைப் பதிவுசெய்ய் முயன்றதுடன், காணொலிப் பதிவுகளும் எடுக்க முயன்றனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செ.கஜேந்திரன் ஆகியோர் பொலிஸாருடன் வாக்குவாதம் செய்ததை அடுத்து, பொலிஸார் அந்த இடத்தில் இருந்து அகன்றுள்ளனர். அதன்பின்னர் துப்புரவாக்கும் பணிகள் நடைபெற்றன.

கிளிநொச்சி, கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்திலும் நேற்று துப்புர வாக்கல் பணிகள் நடைபெற்றபோது, அங்கு வந்த கிளிநொச்சிப் பொலிஸார் அங்கிருந்தவர்களிடம் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர். அங்கிருந்தவர்களின் பெயர் விவரங்கள், விலாசம், வாகன இலக்கங்கள் என்பவற்றையும் பொலிஸார் பதிவு செய்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள், கரைச்சி மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் இந்தத் துப்புரவாக்கும் பணிகளில் ஈடுபட்டனர். கொரோனாத் தொற்று நிலைமையில் ஒன்றுகூடியிருப்பது தொடர்பாகப் பொலிஸாரால் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றியே துப்புரவாக்கும் பணிகள் நடைபெறுகின்றன என்று அவர்களுக்கு அங்கிருந்தவர்கள் பதிலளித்துள்ளனர். சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி துப்புரவாக்கும் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துப் பொலிஸார் அங்கிருந்து அகன்றுள்ளனர். (எ-6,20)

## 600 குடும்பங்கள்...

என்ற சந்தேகத்தில் சுயதனிமைப்ப டுத்தப்பட்டவர் கள் பி.சி.ஆர் பரிசோதனையின் பின்னர் படிப்படியாக விடு விக்கப்படுகின்ற னர் இவ்வாறு யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று ஒருவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவருடன் தொடர்புபட்டவர்களைத் தனிமைப்படுத்தி பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ள சுகாதாரப் பிரிவினர் நட வடிக்கை எடுத்துள்ளனர். தொற்று அச்சம் காரணமாக முடக்கப்பட்டிருந்த 3 கிராமங்கள் விடுவிக்கப்பட் டுள்ளன. தற்போது சுமார் 600 குடும் பங்களே தனிமைப்படுத்தலில் உள்ளன.

அதேவேளை, தற்போது கந்தசஷ்டி விரதம் ஆரம்பித்துள்ளது. ஆலயங்களுக்குள் பூசகர் மற்றும் திருவிழா உபயகாரர் உட்பட 5 பேரே அனுமதிக்கபடுவார்கள் என்ற சுகாதாரப் பிரிவினின் அறிவுறுத்தலைத் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும். மக்கள் தேவையற்ற பயணங்களைத் தவிர்த்து, ஒன்றுகூடுவதையும் தவிர்க்க வேண்டும் -என்றார். (எ-20)

## 2021 கல்வி...

வரி 4ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. முதலாம் தவணையின் முதல் கட்டம் ஜனவரி 4ஆம் திகதி முதல் ஜனவரி 15ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. ஜனவரி மாதம் 16ஆம் திகதி தொடக்கம் 31ஆம் திகதி வரை க.பொ.த சாதாரணதரப் பரீட்சைகளுக்கான விடுமுறைகள் வழங்கப்படவுள்ளன. முதலாம் தவணையின் இரண்டாம் கட்டம் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

இரண்டாம் தவணை கல்வி நடவடிக்கைகள் ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி முதல் ஜூலை 30ஆம் திகதி வரையும் மூன்றாம் தவணை ஓகஸ்ட் மாதம் 30ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 3ஆம் திகதிவரையும் நடைபெறவுள்ளன.

அதேவேளை, முஸ்லிம் பாடசாலைகளின் 2021ஆம் ஆண்டு கல்வி நடவடிக்கைகளில் முதலாம் தவணையின் முதல் கட்டம் ஜனவரி மாதம் 4ஆம் திகதி முதல் ஜனவரி மாதம் 15ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன. முதலாம் தவணையின் இரண்டாம் கட்டம் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன. இரண்டாம் தவணையானது மே மாதம் 17ஆம் திகதிமுதல் ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதிவரை இடம்பெறும்.

ஓகஸ்ட் மாதம் 26 மற்றும் 27ஆம் திகதிகள் விடுமுறை தினங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. மூன்றாம் தவணையானது ஓகஸ்ட் மாதம் 30ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 3ஆம் திகதி வரையும் இடம்பெறவுள்ளது என்று கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள 2021 ஆம் ஆண்டுக்கான பாடசாலை நாள்காட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-மஇ)

## புலமைப்பரிசில்...

பெறுபேறுகள் நேற்றிரவு வெளியிடப்பட்டுள்ளன. நேற்று நள்ளிரவு 12.30 வரை கிடைத்த தகவல்களின் அடிப்படையில் ஐந்து மாணவர்கள் 200 மதிப்பெண்களைப் பெற்றிருந்தனர்.

காலி சங்கமித்தை கல்லூரியைச் சேர்ந்த மாணவி சியாதி சந்துனி கருணாதிலக எனும் மாணவிக்கும் முகமட் பர்சான் மற்றும் முகமட் சிகத் சந்துனு ஆகிய மாணவர்களுக்குமே 200 மதிப்பெண்கள் கிடைத்தன. மேலும் இரு மாணவர்களுக்கும் 200 மதிப்பெண்கள் கிடைத்தன என்று தெரிவிக்கப்பட்டது. எனினும் மேலதிக விவரங்கள் தெரியவரவில்லை. மாவட்ட மட்ட வெட்டுப்புள்ளிகளும் பரீட்சைகள் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளன. அதில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களுக்கு 160 புள்ளிகளும், மன்னார் மாவட்டத்துக்கு 158 புள்ளிகளும், திருகோணமலை மாவட்டத்துக்கு 159 புள்ளிகளும், கொழும்பு மாவட்டத்துக்கு 162 புள்ளிகளும் வெட்டுப்புள்ளிகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன. (அ-ம,22)

# ட்ரம்ப் – பைடன் ஆதரவாளர்கள் அமெரிக்க தலைநகரில் மோதல்



வொஷிங்டன், நவ.16
அமெரிக்க தலைநகர் வொஷிங்டனில் டொனால்ட் ட்ரம்பின் ஆதரவாளர்களுக்கும் ஜோ பைடன் ஆதரவார்களுக்கும் இடையே மோதல் வெடித்துள்ளது என சர்வதேச ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.
அமெரிக்காவில் அண்மையில் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜோ பைடன் வெற்றி பெற்றுள்ள நிலையில், தேர்தலில் முறைகேடு இடம்பெற்றுள்ளது என ட்ரம்ப் தெரிவித்துள்ளார். இந்த நிலையில், டிரம்புக்கு ஆதரவு தெரிவித்து வெள்ளை மாளிகை அருகே திரண்ட ஆயிரக்கணக்கானோர், பிரமாண்ட பேரணியில் நேற்று முன்தினம் ஈடுபட்டனர். அப்போது அங்கு வந்த ஒரு குழுவினர் பாசிஸத்தை நிராகரிப்போம் என்ற முழக்கத்துடன் ட்ரம்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். அதையடுத்து இருதரப்புக்கும் இடையே மோதல் ஏற்பட்டதில் ஒருவருக்கொருவர் மூர்க்கமாகத் தாக்கிக்கொண்டனர் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன. மோதலில் ஈடுபட்ட 20 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் சிலர் காயமடைந்துள்ளனர் எனவும் தெரியவருகிறது. (வ-இ)



# நேதனுக்கு எதிராக மக்கள் போராட்டம்


டெல்அவிவ், நவ. 16
இஸ்ரேல் பிரதமர் நேதன்யாகு பதவிவிலக வலியுறுத்தி அந்த நாட்டுத் தலைநகர் ஜெருசலேமில் நூற்றுக்கணக்கானோர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
ஏற்கனவே கொரோனாப் பரவலைக் கையாள்வதில் அரசு தோல்வி அடைந்துள்ளதால் பிரமதர் பதவி விலக வேண்டும் எனத் தெரிவித்து போராட்டங்கள் இடம்பெற்றுவரும் நிலையில், நீர்மூழ்கிக் கப்பல்கள் வாங்கியதில் ஊழல் மோசடி இடம்பெற்றுள்ளது என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், ஜெருசலேமில் உள்ள நேதன்யாகு வீட்டின் முன்பு கூடிய போராட்டக்காரர்கள், தேசியக்கொடிகளை ஏந்தி, அரசுக்கு எதிராக முழக்கமிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (வ-இ)

# அகதிகள் படகுகள் விபத்து 94 குடியேற்றவாசிகள் சாவு

லண்டன், நவ.16
லிபியாவின் மத்திய தரைக்கடல் பகுதியில்நேற்று முன்தினம் ஒரேநாளில் இடம்பெற்ற இரு படகு விபத் துக்களில் 94 குடியேற்றவாசிகள் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
லிபியா நாட்டின் மத்திய தரைக்கடல் பகுதியில் சட்டவிரோதமாக ஐரோப்பிய நாடுகளில் குடியேறும் நோக்கில் பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட 120க்கும் மேற்பட்ட குடியேற்ற வாசிகளை ஏற்றிச்சென்ற படகு ஒன்று விபத்துக்குள்ளாகி யுள்ளது. இதில் 74 குடியேற்றவாசிகள் உயிரிழந்துள்ளனர். மோசமான வானிலை காரணமாகவே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.
இதேபோல் 50க்கும் அதிகமான குடியேற்றவாசிகளுடன் ஐரோப்பாவுக்கு பயணம் மேற்கொண்ட மற்றுமொரு படகு, தலைநகர் திரிபோலில் இருந்து வடகிழக்கு பகுதியில் அமைந்துள்ள சோர்மன் என்ற நகரின் கரையில் அமைந்துள்ள மத்திய தரைக்கடல் பகுதியில் நடுக்கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 20 பேர் உயிரிழந்துள்ளதுடன் எஞ்சியோர் அப்பகுதி மீனவர்களால் மீட்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)



# மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 22 . 01 . 1958 |  | 15 . 11 . 2020 |

## சிவசம்பு மகேந்திரன்

(ஓய்வுநிலைப் பணியாளர், காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபனம்)

சாவகச்சேரி சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் மத்தி காளிகோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு மகேந்திரன் (அசோகன்) அவர்கள் நேற்று (15.11.2020) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்ற சிவசம்பு மற்றும் தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற குழந்தைவேலு மற்றும் பகவதி தம்பதியரின் அன்பு மருமகனும், அரியமலரின் (ஜெயந்தி) அன்புக் கணவரும், அமலனின் (ஜேர்மனி) பாசமிகு தந்தையாரும், சாலினி (ஜேர்மனி) அவர்களின் அன்பு மாமனாரும், சரோஜா (பிரான்ஸ்), வேதநாயகி காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி (இந்திரா), தங்கராசா மற்றும் சிவபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், உதயகுமார் (கனடா), ஜெயக்குமார் (லண்டன்) நல்லையா, கனகரத்தினம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற யோகநாதன், குலேந்திரராஜன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், வசந்தி (ஜேர்மனி), சுகந்தி, பட்டு (கனடா), காலஞ்சென்ற தவமணிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், குணசேகரம் (ஜேர்மனி), குலசிங்கம் ஆகி யோரின் சகலனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.11.2020) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகள்:**
**021 223 2040**

**தகவல்:**
**குடும்பத்தினர்,**

# சீனாவில் முதலிட தடைவிதித்த ட்ரம்ப்



வொஷிங்டன், நவ.16
சீன நிறுவனங்களில் அமெரிக்கா முதலீடு களை மேற்கொள்ள ட்ரம்ப் நிர்வாகம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது. இதன் மூலம் சீனா மீதான நெருக்கடியை ட்ரம்ப் அதிகரித்துள்ளார்.
புதிய தடையால் சைனா மொபைல், சைனா டெலிகொம் ஆகிய பெரிய நிறுவனங்கள் பாதிக்கப்படும். புதிய தடை ஜனவரி மாதம் 11ஆம் திகதி அமுலுக்கு வரவுள்ளது. இதற்கிடையே சீனாவின் டிக்டொக் செயலியின்மீது டிரம்ப் நிர்வாகம் விதித்த தடை குறித்த மேல் முறையீட்டை அமெரிக்காவின் நீதிமன்றம் பரிசீலித்தது. நீதிபதியின் உத்தரவின் பேரில் அமெரிக்காவின் வர்த்தகத் துறை வியாழக்கிழமை அமுலுக்கு வரவிருந்த தடையை நிறுத்தி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)

# யூரோ கிண்ணத்துக்கு மூன்று அணிகள் தகுதி

லண்டன், நவ.16

ஐரோப்பிய கால்பந்து சம்பியன்ஷிப் தொடரில் விளையாடுவதற்கு ஸ்கொட்லாந்து, ஹங்கேரி மற்றும் ஸ்லோவேகியா ஆகிய அணிகள் தகுதிபெற்றுள்ளன. ஹங்கேரி தலைநகர் புடாபெஸ்டில் நடைபெற்ற தகுதிச்சுற்றுப் போட்டியில் ஹங்கேரி அணி 2-1 என்ற கோல் கணக்கில் ஐஸ்லாந்து அணியை வீழ்த்தி தகுதி பெற்றது. சேர்பியா அணிக்கெதிரான போட்டியில், ஸ்கொட்லாந்து அணி 5-4 என்ற கோல் கணக்கில் வென்று தகுதி பெற்றது. ஸ்லோவேகியா அணி 2-1 என்ற கோல் கணக்கில் வடக்கு அயர்லாந்தை வீழ்த்தி ஐரோப்பிய கால்பந்து சம்பியன்ஷிப் தொடருக்குத் தகுதி பெற்றுள்ளது. இந்தப் போட்டி இந்த ஆண்டு ஜூன் மாதம் நடைபெறவிருந்த நிலையில் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக ஒத்திவைக்கப்பட்டது.

இந்தத் தொடர் அடுத்த ஆண்டு ஜூன் 11 ஆம் திகதி முதல் ஜூலை 11 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-இ)

# பட்டம் வென்று சின்னர் சாதனை

ரோம், நவ.16

சோபியா பகிரங்க ரென்னிஸ் இறுதிப் போட்டியில் இத்தாலி நாட்டின் ஜன்னிக் சின்னர் இளம் வயதில் பட்டம் வென்று சாதனை படைத்துள்ளார்.

இந்த ரென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டி பல்கேரியா நாட்டில் நடைபெற்றது. அதில், இத்தாலி நாட்டின் ஜன்னிக் சின்னர் மற்றும் கனடா நாட்டின் வாசிக் பொஸ்பிசில் ஆகியோர் விளையாடினர். இந்த ஆட்டத்தில் 6-4, 3-6, 7-6(3) என்ற செற் கணக்கில் சின்னர் வெற்றி பெற்றார். 19 வயதில் முதன்முறையாக ஏ.டி.பி. ரென்னிஸ் போட்டியில் பட்டம் வென்ற இளம் வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். (ந-இ).


## காணி விற்பனைக்கு உண்டு
## வீடு விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் மானிப்பாய் உடுவில் றோட்டுடன் ஆனந்த வைரவர் கோயில் சந்திக்கு அருகாமையில் 2 பரப்புக் காணி நல்ல நிலையில் உள்ள ஒரு வீடும் 3 பரப்புக் காணியுடன். தொடர்பு: குரு

077 805 1655, 076 6400 974

## காணிகள் தேவை

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உட்பட்டது, கோப்பாய் பிரதேச சபைக்கு உட்பட்டது, மானிப்பாய் பிரதேச சபைக்கு உட்பட்டது. 10 பரப்புக்கு மேலே உள்ள காணி தேவை. உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும். தரகர் தேவையில்லை.

தொடர்பு: 076 221 2037

## விரைவு பொதிகள் சேவை

உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால்கள், பொதிகள் சேவை வழமைபோன்று நடைபெறுகின்றன.

திருமுருகன் கொம்நெற் (Pvt) Ltd
321, K.K.S வீதி, யாழ்ப்பாணம்

077 755 4528, 021 222 7835

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் ராச வீதியில் (ராசவீதி சந்தி அருகாமை) 3 பரப்பு காணி உள்ளது. பிரித்துக் கொடுக்கப்படும். யாழ் கோண்டாவிலில் 1 1/2 பரப்புக் காணி உள்ளது.

077 2880 152, 074 075 4204

## வேலையாட்கள் தேவை

மாவிட்டபுரத்தில் அமைந்துள்ள K.M.V.R-ஆயுர்வேதமருந்து & பான்சி கடைக்கு வேலையாட்கள் உடன் தேவை.

தொடர்புக்கு:- 0769132049, 0772920394

K.M.V.R-ஆயுர்வேதமருந்து & பான்சிகடை.
K.K.S-வீதி மாவிட்டபுரம்.


## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

16.11.2020

விண்ணக வாழ்வின் நினைவு நாள்

அமரர்

**T. பீற்றர்சன் விஜயசிங்கம்**

(ஓய்வுபெற்ற வரி மேற்பார்வையாளர், SHAMROCK முன்னாள் நிர்வாகி)



இறைவா உமது இரக்கத்தை
இறந்த பீற்றர்சன் விஜயசிங்கத்தின்
மேலும் சகல ஆன்மாக்கல் மேலும்
காட்டியருளும்.

குடும்பத்தினர்
ஈச்சமோட்டை

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## பொன்னர் சின்னையா

## (கொண்டா ராசு)

[பிரபல புகையிலை வர்த்தகர், எரிபொருள் நிரப்பு நிலையம், யோகாஸ் கிறீம் ஹவுஸ், PS ஸ்தாபனம் [மந்திகை], ஆகியவற்றின் ஸ்தாபகரும், பழவத்தை காளி அம்பாள் தேவஸ்தான அறங்காவலரும்]

திதி . துதிகை வளர்பிறை (16.11.2020)



பெருமை மிகு பொன்னர் வம்சத்தின் குல விளக்கே .
குலம் சிறக்க வந்திட்ட சிந்தனையாளன் சின்னையாவே.
இல்லறம் இனிக்க யோகேஷ்வரியினை யோகமுடன் கரம் பற்றியவரே..
புகையிலை வர்த்தகத்தின் சிகரம் தொட்டவரே.
வியாபாரத்தின் வித்தே, வியாபாரி மூலை பழவத்தை தந்த முத்தே.
எரிபொருள் நிரப்பு நிலையம் தந்து இடம் பிடித்திட்டீரே.
யோகத்தோடு யோகாஸ் குளிர்களி நிலையமும் அமைத்தீரே.
பல தொழில் கண்டு விட்ட உயர்வான தொழிலதிபரே.
வர்த்தகத்தில் மாத்திரம் வித்தகரல்ல -நீங்கள்.
வாழ்வு செழிக்கும் சமூகத்திலே ஊரறிந்த உத்தமர்.
பார் காக்கும் பெருமாட்டியாம் பழவத்தை காளியம்பாள் உறையும்
பதியில் தர்ம கர்த்தாவாய் அறம் செய்தாய். புண்ணியங்கள் பல விதைத்த வியத்தகு சேவகன் ஐயா நீங்கள். கொண்டா ராசு என்று கொண்டாடும் ஊர்-உனை மந்திகை புகழும் மங்காத புகழரசன். ஆங்கே இத்தனையும் செய்து இறைவன் பாதம் அடைந்தாயே.
உத்தமனாம் உன் இறுதிக் கடன் செய்ய-உன் ஏழு மக்களும் உடனிருக்க-நான் மட்டும் உன் கடன் செய்ய முடியாத பாவியப்பா பரிதவிக்கின்றேன்.
கடைக்குட்டி தானே கஷ்டம் கொடுக்காது என்றெண்ணியோ தவிர்த்து விட்டாய்...
தவியாய் தவிக்கின்றேன் தந்தையே !!
ஆண்டுகள் மூன்றென்ன ஆயிரம் ஆனாலும் உங்கள் நினைவுகளுடன்

என்றும்
யோகன் (யோகாஸ் கிறீம் ஹவுஸ்)
Swizerland.

பழவத்தை, வியாபாரி மூலை
பருத்தித்துறை.

மலர்வு
15.12.1944

உதிர்வு
19.11.2017

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : .news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.11.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.